அதன்படி, வீட்டு உபயோகமில்லாத குடிநீர் குழாய் இணைப்புகளில் பொருத்தப்பட்டுள்ள அளவுமானிகளில் பணியாளர்கள் மூலம் மாதந்தோறும் அளவீடு எடுக்கப்பட்டு, அதன் விபரம் கணினியில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

இப்பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் அளவீடு பணிகளில் தொய்வு ஏற்பட்டு, பதிவேற்றும் பணி பாதிப்படைகிறது.

எனவே முதற்கட்டமாக மண்டலம் எண்.5க்குட்பட்ட வார்டு எண்.8,9, 10, 11, 22 முதல் 29, 55க்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீட்டு உபயோகமில்லாத இணைப்புகளில் அளவீடுகளை துல்லியமாக மேற்கொள்ளவும், மேற்படி அளவீடுகள் இணைய வழியில் கணினியில் பதிவேற்றும் வகையிலான SMART WATER METER பொருத்தும் பணியினையும், இப்பணிக்கான software development மற்றும் உத்திரவாத காலத்திற்கு பிறகு ஓர் ஆண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிக்காகவும் பின்வருமாறு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | மண்டலம் எண்.5க்குட்பட்ட வார்டு எண்.8,9, 10, 11, 22 முதல் 29, 55க்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீட்டு உபயோகமில்லாத இணைப்புகளில் பொருத்தப்பட்டுள்ள SMART WATER METER பொருத்தும் பணிக்கான software development மற்றும் உத்திரவாத காலத்திற்கு பிறகு ஓர் ஆண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்<br>**இ4/15 4/2023/மையம்** | ரூ.37.70 இலட்சம் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.37.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட தொகையினை 2023-24ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (4102001) தலைமை நீர்ப்பணி நிலையம் – மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ.100.00 இலட்சத்திலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/ 154 /2023 / மையம்**

**தீர்மானம் எண்.286 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.IVக்குட்பட்ட வார்டு எண்.56க்குட்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு சொசைட்டி காலனி, எஸ்.எஸ். நகர் பகுதியில் மாநில நிதிக்குழு மான்ய நிதியின் கீழ் புதிதாக 5.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி முடிவுபெறும் தருவாயில் உள்ளது. இப்பணி முழுவதுமாக முடிவு பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏதுவாக வால்வு தொட்டி அமைத்தல், SCADA அறை கட்டுதல் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் வளாகத்திற்கு சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தினால், சமூக விரோத செயல்கள் நடைபெற வாய்ப்புள்ளதாலும், கட்டிடம் சேதமடைய வாய்ப்புள்ளதாலும், சுற்றுச்சுவர் அமைத்து கட்டிட வளாகத்தினை பராமரிக்க வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட தமிழ்நாடு கூட்டுறவு சொசைட்டி காலனி, எஸ்.எஸ்.நகர் பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல், வால்வு தொட்டி அமைத்தல், உந்துநீர் மற்றும் பகிர்மானக் குழாய் பதித்தல், SCADA அறை கட்டுதல் மற்றும் இதர மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.52.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.52.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட தொகையினை 2023–24ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (4103201) தலைமை நீர்ப்பணி நிலையம் / மேல்நிலை நீர்தேக்க தொட்டி / குடிநீர் விநியோக குழாய்கள் புணரமைத்தல் மற்றும் இதர பணிகள் என்ற தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டிலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/ 3534 /2023 / மையம்**

**தீர்மானம் எண்.287 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கட்டுப்பாட்டில் அமைந்துள்ள கலெக்டர் வெல் எண்.3ன் மூலம் சுமார் 20.00 மில்லியன் லிட்டர் குடிநீர், வார்டு குழு எண்.5ல் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு உந்தப்பட்டு, அப்பகுதிவாழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு உந்தப்படும் குடிநீரில் இரும்புத்தாது (Iron as Fe) அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக உள்ளதாலும், குடிநீர் கலங்கலாக வருவதாலும், பொதுமக்கள் நலன் கருதி அய்யாளம்மன் படித்துறை அருகில், இரும்பு தாது வடிகட்டிட ஏதுவாக மாநில நிதிக்குழு மான்ய நிதி 2021–22ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள காற்றுலர்த்தியினை மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால், கல்வித்துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த நிகழ்ச்சிக்காக பந்தல் அமைத்தல், மேடை, நாற்காலிகள் மற்றும் அதன் தொடர்புடைய பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.10.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, இப்பணியினை மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைந்த விலைப்புள்ளியில் செய்து தர சம்மதம் தெரிவித்த மெசர்ஸ்.அன்னை ஆனந்த், திருச்சி நிறுவனத்தார் மூலம் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் 1994ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 3535/2023 / மையம்)**

**தீர்மானம் எண்.288 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கட்டுப்பாட்டில் அமைந்துள்ள தலைமை நீர்ப்பணி நிலையம் மற்றும் டர்பைன் நீர்ப்பணி நிலையம் மூலம் நாளொன்றுக்கு முறையே 14.00 மற்றும் 12.00 மில்லியன் லிட்டர் குடிநீர் உந்தப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய நீர்ப்பணி நிலையங்களில் நீராதாரத்திற்காக ஆற்றங்கரையில் 20 எண்ணிக்கை 250 மி.மீ விட்டமுள்ள ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு நீண்ட நாட்களாக பயன்பாட்டில் இருந்து வந்த நிலையில், ஆழ்துளை கிணறு எண்கள்.4,5,8,15,17,R4 ஆகியவற்றின் ஊற்றுத்திறன் குறைந்ததால் தேவையான குடிநீர் பெற இயலவில்லை.

எதிர்வரும் கோடை காலத்தை கருத்தில் கொண்டும், ஊற்றுத்திறன் குறைந்த ஆழ்துளை கிணறுகளுக்கு பதிலாக புதிய ஆழ்துளை கிணறுகள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே பொதுமக்களுக்கு வழங்கிடும் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மேற்கூறிய பணியினை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் இத்துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.54.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.54.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட தொகையினை 2023–24ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (4103201) தலைமை நீர்ப்பணி நிலையம் / மேல்நிலை நீர்தேக்க தொட்டி / குடிநீர் விநியோக குழாய்கள் புணரமைத்தல் மற்றும் இதர பணிகள் என்ற தலைப்பின் கீழ் திருத்திய மதிப்பீட்டிலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/ 4033 /2023 / மையம்**

**தீர்மானம் எண்.289 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணியில் கீழ்கண்ட விபரப்படி TN 45 AL 6417 மற்றும் TN 45 L 3268 JCB வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| Sl. No | Vehicle Registration No | Vehicle type | Year of Manufacturing | Date of Registration | Fuel | Age of Vehicle |
|---|---|---|---|---|---|---|
| 1. | TN 45 L 3268 | JCB Poclain | Aug-99 | 27.9.99 | Diesel | 23 |
| 2. | TN 45 AL 6417 | JCB Poclain | Aug-08 | 3.10.08 | Diesel | 14 |

தற்பொழுது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 15 வருடங்கள் முடிவடைந்த வாகனங்களுக்கு தகுதிச்சான்று புதுப்பிப்பது, Ministry of Road Transport and Highways Notification, New Delhi, Date: 16.01.2023ல் கண்டுள்ள அறிவிப்பின்படி 01.04.2023 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

மேலும், 15$^{th}$ CFC Action Point code (VE 11.2ல்) 15 வருடங்கள் முடிவடைந்த வாகனங்களை நிறுத்திவிட்டு அதற்கு பதிலாக புதிய வாகனங்கள் வாங்கிக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

15வது மத்திய நிதிக் குழு 2022–23ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை தலைப்பு நிதியில் Four Wheel drive (4x4) Backhoe Loader vehicle (JCB) – 2 எண்ணிக்கை கீழ்கண்ட விவரப்படி Gem Portal மூலம் நேரடியாக வாங்கிக்கொள்ளலாம்.

| Sl. No | Description | Amount |
|---|---|---|
| 1. | JCB Backhoe Loader 74HP, 0.3 cubic meter JCB (3DX Super with 4WD, 6 in 1, HDT, Live link)-2 Nos<br>(Rs.40,85,000/- per vehicle x 2Nos) | Rs.81,70,000/- |

எனவே, மேற்கண்ட விபரப்படி புதிதாக Four Wheel drive (4x4) Backhoe Loader vehicle (JCB) வாகனங்கள் இரண்டு எண்ணிக்கை ரூ.81.70 இலட்சம் மதிப்பீட்டில் 15வது மத்திய நிதிக் குழு 2022–23ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை தலைப்பு நிதியில் Gem Portal மூலம் நேரடியாக வாங்கிக்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப அனுமதி வேண்டி மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. பழைய JCB வாகனம் 2 எண்ணிக்கையினை கழிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், புதிய JCB வாகனம் – 2 எண்ணிக்கை மதிப்பீடு ரூ. 81,70,000/–ல் Gem Portal மூலம் நேரடியாக வாங்கிக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி உரிய அனுமதி பெறுவதற்கு, மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, அனுப்பியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவினத்தை 15வது மத்திய நிதிக் குழு 2022–23ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.2200.00 இலட்சத்திலிருந்து, மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**இ5/ 4075 /2023**(மை)

**தீர்மானம் எண்.290 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பில் இல்லந்தோறும் சென்று திடக்கழிவுகளை சேகரிக்கும் பணியில் 239 எண்ணிக்கை இலகுரக வாகனங்கள் இயக்கப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சியில் தற்பொழுது இல்லந்தோறும் சென்று திடக்கழிவுகளை சேகரிக்கும் பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு 159 எண்ணிக்கை இலகுரக வாகனங்கள் ஒப்படைக்கப்பட உள்ளது. மீதமுள்ள 80 இலகுரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான, 80 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு, 80 ஓட்டுநர்களை வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 92 நாட்களுக்கு (01.07.2023 முதல் 30.09.2023 வரை) பணி அமர்த்திக் கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.RCJ3/13807/2022நாள்: 17.07.2022ல் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் ரூ.54.10 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களை இயக்குவதற்கு 80 ஓட்டுநர்களை வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 92 நாட்களுக்கு ரூ.54.10 இலட்சத்தில் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட செலவீனத்தை 2023–24ம் ஆண்டு வருவாய் நிதி செலவீனங்கள் ஊதியம் தலைப்பில் –கூலி இதர இனத்திற்கு என்ற கணக்கு தலைப்பு எண்.2101010ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.3200.00 இலட்சத்தில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/4471/2023**(மையம்)

**தீர்மானம் எண்.291 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு, ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்கள் 347 வாகனங்கள் இயக்கப்பட்டு வருகிறது.

இதில் 239 இலகுரக வாகனங்கள் திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணிக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் தற்பொழுது இல்லந்தோறும் சென்று திடக்கழிவுகளை சேகரிக்கும் பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு 159 எண்ணிக்கை இலகுரக வாகனங்கள் ஒப்படைக்கப்பட உள்ளது. மீதமுள்ள 80 இலகுரக வாகனங்களை இயக்குவதற்கு, ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி பணி மேற்கொள்வதற்கு நடவடிக்கை வேறொரு கோப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, 347 – 239 = 108 வாகனங்களுக்கு, தற்பொழுது 65 எண்ணிக்கை நிரந்தர பணி ஓட்டுநர்களில், 37 ஓட்டுநர்கள் மட்டுமே வாகன ஓட்டுநர்களாக பணியில் உள்ளனர். மீதமுள்ள 71 வாகனங்களை இயக்குவதற்கு தேவையான, 71 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு, 71 ஓட்டுநர்களை வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 92 நாட்களுக்கு (01.07.2023 முதல் 30.09.2023 வரை) பணி அமர்த்திக் கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.RCJ3/13807/2022 நாள்: 17.07.2022ல் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் ரூ.48.10 லட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு, ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு 71 ஓட்டுநர்களை வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 92 நாட்களுக்கு ரூ.48.10 லட்சத்தில் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தை 2023–24ம் ஆண்டு வருவாய் நிதி செலவீனங்கள் ஊதியம் தலைப்பில் –கூலி இதர இனத்திற்கு என்ற கணக்கு தலைப்பு எண்.2101010ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.3200.00 இலட்சத்தில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/4472/2023**(மையம்)

**தீர்மானம் எண்.292 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்1 முதல் 5–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள புதைவடிகால் கழிவுநீர் குழாயில் அமைந்துள்ள ஆழ்நுழைவு தொட்டியின் மூடி (600mm Dia Ductile Iron manhole Cover with Frame) அடிகடி சேதமடைந்து போக்குவரத்து மற்றும் பொது மக்களுக்கு இடையூராக இருப்பதால் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் பழுதடைந்துள்ள ஆழ்நுழைவுத் தொட்டியின் மூடிகளை மாற்றி, புதிய இரும்பிலான மூடி 600mm Dia Ductile Iron manhole Cover with Frame பயன்படுத்துவதற்கு ஏதுவாக கீழ்கண்ட பட்டியல் படி வாங்குவதற்கு மூன்று நிறுவனங்களிடம் இருந்து உள்ளூர் விலைப்புள்ளி பெற்று அதில் குறைவாக உள்ள நிறுவனத்தின் விலையை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 44.40/–இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| Sl.No | Materials Name | Qty | Each rate Rs. | Amount Rs. |
|---|---|---|---|---|
| 1. | 600mm Dia - 95 kgs. Ductile Iron manhole Cover with Frame ( 40MT ) Extra Heavy Duty as per EN 124 | 120 | 27,100/- | 32,52,000/- |
| 2 | 600mm Dia - 60 kgs. Ductile Iron manhole Cover with Frame (25MT) Heavy Duty as per EN 124 | 65 | 18,250/- | 11,86,250/- |
| 3 | Unforeseen items | | | 1,750/- |
| | **Total** | | | **44,40,000/-** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மதிப்பீட்டு தொகை ரூ. 44,40,000/– க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2023 – 24 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் 4103102 என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**இ6/4310 /2023 (மையம்)**

**தீர்மானம் எண்.293 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:14**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் உபயோகத்திற்காக மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 1415 எண்கள் மார்க் II கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் உள்ள கைப்பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் சரிசெய்து பொது மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படா வண்ணம் பராமரிக்க மார்க் II கைப்பம்புகளுக்கு தேவையான உதிரிபாகங்கள் மைய மண்டியில் வாங்கி வைத்து கையிருப்பில் வைக்கப்பட்டு வருகிறது. மேற்படி கைபம்புகளுக்கு தேவையான உதிரி பாகங்கன் சில இனங்கள் முற்றிலும் தீர்ந்த நிலையில், சில இனங்கள் மிக குறைந்த அளவிலும் உள்ளதால் கீழ்கண்டுள்ள உதிரி பாகங்களை அரசு நிறுவனமான மெசர்ஸ். டான்சி டூல் மற்றும் என்ஜினியரிங் ஒர்க்ஸ், திருச்சி என்ற நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறாமல் நேரடியாக வாங்கி கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விவரம் | ஒன்றின் விலை | தேவைப்படும் எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | 32mm dia Pipe 3 mtr long without coupling | 1200.00 | 300 Nos | 360000.00 |
| 2 | 32mm dia GI Coupler | 100.00 | 300 Nos | 30000.00 |
| 3 | Connecting rod 3mtr long | 470.00 | 300 N0s | 141000.00 |
| 4 | Cylinder Assembly | 3835.00 | 200 Nos | 767000.00 |
| 5 | Head with cover & Third Plate | 3585.00 | 65 Nos | 233025.00 |
| 6 | Handle Asseembly | 3100.00 | 65 Nos | 201500.00 |
| 7 | Water Tank | 2100.00 | 65 Nos | 136500.00 |
| 8 | Stand (T) | 4450.00 | 20 Nos | 89000.00 |
| 9 | Flange bolt unit ( M12x40) | 21.00 | 1000 Nos. | 21000.00 |
| | Total | | | 1969025.00 |
| II | Provision for 12 items GST &SGST 5%on 2089350.00 | | | 98951.25 |
| | Total | | | 2077976.25 |
| III | Unforseen items and Contingencious and petty and supervision charges | | | 2048.75 |
| | Total | | | 2080000.00 |

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட மதிப்பீட்டு தொகை ரூ.20.80 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. தமிழக அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனமான டான்சி டூல் மற்றும் என்ஜினியரிங் ஒர்க்ஸ், திருச்சி என்ற நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறாமல் நேரடியாக வாங்கி கொள்ள அனுமதிக்கலாம்.
3. 2023–2024ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் 4103201 குடிநீர் வழங்கு பணிகள் என்ற கணக்கு தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.25.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ளலாம்.

**இ6/4046/2023**

**தீர்மானம் எண்.294 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:15**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நான்கு கோட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பொதுதனியார் கூட்டாண்மை PPP (Puplic Private Partnership) முறையில் பராமரிப்பு செய்யவும்,மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் புதியதாக தெருவிளக்குகள் பொருத்தி இயக்கி பராமரிக்கும் பணிகளை பத்தாண்டுகளுக்கு மேற்கொள்ள மெசர்ஸ்.சபரி எலக்ட்ரிக்கல்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, மேற்படி நிறுவனம் கடந்த 01.04.2014 முதல் இயக்கி பராமரித்து வருகிறது

இந்நிலையில் தெருவிளக்குகளுக்கான சேமிப்பு விவரங்களை மூன்றாம் நபர் ஆய்வு நிறுவனம் சரிபார்த்து மார்ச்–2017–ல் Substantial Completion Certificate வழங்கியுள்ளது. PPP ஒப்பந்த விதிகளின் படி Substantial Completion நாளிலிருந்து 10 ஆண்டுகள் பராமரிப்பு காலம் ஆகும்.அதன் படி இந்நிறுவனத்தின் பராமரிப்பு காலம் 31.03.2027 வரை உள்ளது. தற்போது இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் மொத்தம் 41615 எண்கள் உள்ளன. இந்நிலையில் அரசாணை எண்: **126**, நாள்: **07.12.2021** –ன் படி இம்மாநகராட்சியின் நான்கு கோட்டங்களுக்குட்பட்ட வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டு ஐந்து மண்டலமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆகையால் தற்போது உள்ள புதிய வார்டுகளின் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்டு தெருவிளக்கு மின்கம்பங்களில் புதிய வார்டு எண் தெருவிளக்கு சுவிட்சு எண் மற்றும் தெரு விளக்கு கம்பம் எண் ஆகியவற்றை அந்தந்த மின்கம்பங்களில் பெயின்ட் முலம் எழுதவும் , மேலும் தெரு விளக்கு கட்டுபாட்டு மையத்தில் (CCMC) புதிய வார்டுகளின் அடிப்படையில் அந்தந்த சுவிட்சுகளில் இணைக்கப்பட்டுள்ள மின்விளக்குகளின் எண்ணிக்கை விபரம், மின்பளு விபரம், மின்விளக்குகளின் புகார் விபரம் மற்றும் மின் சக்தி சேமிப்பு விபரம் ஆகியவற்றை மென்பொருளில் மாற்றம் செய்து புதிதாக பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் மூன்றாம் நபர் ஆய்வு நிறுவனம் மூலம் 2014–ல் வழங்கப்பட்ட சான்றிதழின் படி இம்மாநகராட்சியில் 41591 மின்கம்பங்கள் உள்ளன. தற்போது கூடுதலாக மின் கம்பங்கள் அமைக்க பட்டுள்ளன. எனவே உத்தேசமாக 44000 மின் கம்பங்களில், மேற்கண்ட பணியை செய்ய வேண்டியுள்ளது.

இந்நிலையில் இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் மெசர்ஸ்.சபரி எலக்ட்ரிக்கல்ஸ்,சென்னை நிறுவனம் இயக்கி பராமரித்து வருவதாலும், இந்நிறுவனத்திற்கான பராமரிப்பு காலம் 31.03.2027 வரை உள்ளதாலும், இப்பணியை வேறு ஒரு நிறுவனத்தை கொண்டு செய்து முடிக்க இயலாது என்பதாலும் மேற்படி நிறுவனத்தாரிடம்

இப்பணிக்கான செலவின விபரம் கோரியதில் இந்நிறுவனம் இப்பணிகளை மேற்கொள்ள 19.12.2022 தேதிய கடிதத்தில் ஒரு மின் கம்பத்திற்கு ரூ.69.00 + GST 18 % வீதம் 44000 மின்கம்பங்களுக்கு (ரூ.30,36,000/-+ரூ.5,46,480/-) மொத்தம் ரூ.35,82,480/-க்கு மதிப்பீட்டுத் தொகை விபரம் வழங்கியுள்ளது. இந்நிறுவனத்தின் விலைவிபர கடித்தினை 23.12.2022 அன்று நடைபெற்ற தொழில்நுட்ப குழு கூட்டத்தில் பரிசீலித்து பரிந்துரைத்துள்ளது.

எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் உத்தேசமாக கணக்கிடப்பட்டுள்ள மின் கம்பங்களுக்கு ரூ.69.00 + GST 18 % வீதம் மொத்தம் 44000 மின்கம்பங்களுக்கு (ரூ.30,36,000/-+ ரூ.5,46,480 /-) ரூ.35,82,480/ - செலவினத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், மேற்படி பணியினை மெசர்ஸ்.சபரி எலக்ட்ரிக்கல்ஸ்,சென்னை நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:–</u>**

1. மேற்படி உத்தேச செலவினம் ரூ.**35,82,480/**-க்கு மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மெசர்ஸ்.சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை நிறுவனம் தற்போது தெருவிளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வருவதாலும், இந்நிறுவனத்திற்கு பராமரிப்பு காலம் 31.03.2027 வரை உள்ளதாலும் இந்நிறுவனம் மூலம் இப்பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
3. இச்செலவினத்தை வரவு செலவுத்திட்டம் 2023-24 கணக்குதலைப்பு எண்: 2305007 தெருவிளக்கு பராமரிப்பு செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.100.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ6/11123/2012/மையம்**

**தீர்மானம் எண்.295 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் – IV, வார்டு எண்.26க்குட்பட்ட கீழ வண்ணாரப்பேட்டையில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.306 மற்றும் 309 கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் குழந்தைகளின் நலன்கருதி அவற்றினை இடித்துவிட்டு புதிதாக கட்டுவது அவசியமாகிறது. எனவே, மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக சுற்றுச்சுவருடன் கூடிய கட்டிடம் கட்டும் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.59.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.59.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023–2024ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் பொது நிதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய திட்ட கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் மேம்படுத்துதல் (4102001–1) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.200.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**( இ8 / 4772 / 2023(மையம் )**

**தீர்மானம் எண்.296 வார்டு குழு அலுவலகம் IV என்பதற்கு பதிலாக V என்ற திருத்தத்துடன் அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது..**

**பொருள்: 17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் – IV, வார்டு எண்.26க்குட்பட்ட வண்ணாரப்பேட்டையில் செயல்பட்டு வரும் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில், பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய வகுப்பறை இல்லாத காரணத்தினால், மாணவர்களின் நலன்கருதி மேற்படி பள்ளியில் இரண்டாம் தளத்தில் கூடுதல் வகுப்பறை கட்டுவது அவசியமாகிறது. எனவே, மேற்படி பள்ளியின் இரண்டாம் தளத்தில் புதிதாக மூன்று வகுப்பறைகள் கட்டுவதற்கும், இப்பள்ளியின் மேற்கு பகுதியிலுள்ள சுற்றுச்சுவர் பழுதடைந்துள்ளதால், அவற்றை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக சுற்றுச்சுவர் கட்டும் பணியினை மேற்கொள்ளவும் மதிப்பீடு ரூ.59.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.59.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023–2024ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கல்வி நிதியில் பள்ளிக் கட்டிடங்கள் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் (4102001) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2000.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

( இ8 / 4773 / 2023(மையம் )

**தீர்மானம் எண்.297 வார்டு குழு அலுவலகம் IV என்பதற்கு பதிலாக V என்ற திருத்தத்துடன் அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் அமைந்துள்ள தலைமை நீர்பணி நிலையம் மற்றும் டர்பைன் நீர்பணி நிலையம் மூலம் நாளொன்றுக்கு முறையே 15.00 மற்றும் 12.00 மில்லியன் லிட்டர் குடிநீர் பொதுமக்களுக்கு உந்தப்பட்டு வருகிறது.

மேற்கூறிய நீர்பணி நிலையங்களில் ஒப்பந்தப் பணியாளர்கள் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர்.. இந்த நீர்பணி நிலையங்களில் செயல்பாடுகள் மற்றும் குடிநீரை சுத்தம் செய்யும் முறையை பார்வையிட, அவ்வப்போது மருத்துவம் பயிலும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், செவிலியராக பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் அதிகஅளவில் வந்து செல்கின்றனர்.

எனவே குளியல் அறையுடன் கூடிய கழிப்பிடம் கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆவதால், மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, போதிய நிதி இல்லாத காரண்த்தினால், புதிய குளியல் அறையுடன் கூடிய கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.10.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தூய்மை இந்தியா திட்டம் (2.0)ன் கீழ் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மதிப்பீடு ரூ.10.95 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான நிதியினை தூய்மை இந்தியா திட்ட மான்ய ( SBM 2.0) நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்து வழங்குவதற்கு அனுமதி அளிக்கலாம்.

**இ7/815/2023(மையம்)**

**தீர்மானம் எண்.298 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:19**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுக் குழு அலுவலகம் – 2 வார்டு எண் 20 க்குட்பட்ட மேல புலிவார்டு சாலையில் நகர பொலிவாக்குதல் (Smart City) திட்டத்தின் கீழ் பழைய பாஸ்போர்ட் அலுவலக கட்டடத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தில் கீழ்காணும் விவரப்படியான பரப்பு அளவுகள் கொண்ட தளங்கள் உள்ளன.

| கட்டுமான விபரம் | மேல புலிவார்டு ரோடு வணிக வளாகம் (வார்டு எண் 20 ) | அரசு வழிகாட்டு மதிப்பு சதுர அடிக்கு ரூ. |
|---|---|---|
| தரைத்தளம் | 255.87 ச.மீ. (அ) 2754 ச.அடி | 71.53 |
| முதல்தளம் | 280.98 ச.மீ. (அ) 3024 ச.அடி | 65.15 |
| இரண்டாம் தளம் | 280.98 ச.மீ. (அ) 3024 ச.அடி | 65.48 |
| மூன்றாம் தளம் | 280.98 ச.மீ. (அ) 3024 ச.அடி | 65.81 |
| நான்காம் தளம் | 280.98 ச.மீ. (அ) 3024 ச.அடி | 65.81 |

மேற்காணும் விவரப்படியான அளவீடுகளில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டடங்களை முழுவதுமாக வாடகைக்கு எடுக்க விரும்பும் அரசு துறைகள் / தனியார் வணிக நிறுவனங்களிடமிருந்து ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி ஒதுக்கீடு செய்யவும், மேற்படி வணிக வளாகத்துக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகையாக ரூ.15,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) நிர்ணயம் செய்யவும் மேலும், மேற்படி வணிக வளாகங்களுக்கு தனித்தனியாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் 19.05.2023 அன்று கோரவும், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் முடிய உள்ள காலத்திற்கு அனுமதி அளிக்கவும், மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. தரைத்தளம் முதல் நான்காம் தளம் வரை உள்ள அலுவலக பயன்பாட்டு இடத்தினை மாத வாடகை அடிப்படையில் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி இனங்களுக்குரிய மாநகராட்சியின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி க்குரிய பொதுக்கட்டுப்பாடுகள், சிறப்புக்கட்டுப்பாடுகள், தனிக்கட்டுப்பாடுகளை அனுமதிக்கலாம்.
3. ந.நி.ம.கு.வ.துறை அரசாணை எண்.92/2007ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் முடிய உள்ள காலத்திற்கு அனுமதி அளிக்கலாம்.
4. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத்தொகையாக(Deposit) ரூ.15,00,000/– மாநகராட்சிக்கு செலுத்த அனுமதி அளிக்கலாம்.
5. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும், மேலும், தேவைக்கேற்ப ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்குரிய படிவம், புதிய ஏல நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கியவற்றை மெசர்ஸ்.தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ செர்வு திருச்சி என்ற நிறுவனத்தின் மூலம் அச்சடித்து பெற்றுக்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி அளிக்கலாம்.

அ1 / 02227 / 2023(வா.குஅ.II)

**தீர்மானம் எண்.299 –19.05.2023 தேதியை நீக்கம் செய்து திருத்தத்துடன் அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:20**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–2–க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனங்களில் கீழரண் சாலையில் நகர பொலிவாக்குதல் (Smart City Scheme) திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள மீன் மற்றும் இறைச்சி அங்காடியில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள 148 (74x2) கடைகளுக்கு மாத வாடகையின் கீழ் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகைதாரர் வசம் ஒப்படைப்பு செய்வதற்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகை இனமாகவும் கருதி பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரி குத்தகைக்கு ஒப்படைப்பு செய்ய ஏதுவாக அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி வருடாந்திர வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு

| வ. எண் | விவரம் | கடை அளவு (சதுர அடியில்) | சதுர அடியில் விலை (ரூ) | வாடகை தொகை மாதத்திற்கு / சதுர அடியில்)(ரூ) |
|---|---|---|---|---|
| **தரைதளம்** | | | | |
| 1 | கடை எண்.1 | 129.60 | 77.04 | 10,000 |
| 2 | கடை எண்.2 | 129.60 | 77.04 | 10,000 |
| 3 | கடை எண்.3 | 129.60 | 77.04 | 10,000 |
| 4 | கடை எண்.4 | 129.60 | 77.04 | 10,000 |
| 5 | கடை எண்.5 | 129.60 | 77.04 | 10,000 |
| 6 | கடை எண்.6 | 129.60 | 77.04 | 10,000 |
| 7 | கடை எண்.7 | 119.70 | 77.04 | 9,300 |
| 8 | கடை எண்.8 | 129.60 | 77.04 | 10,000 |
| 9 | கடை எண்.9 | 133.21 | 77.04 | 10,300 |
| 10 | கடை எண்.10 | 127.29 | 77.04 | 9,900 |
| 11 | கடை எண்.11 | 127.29 | 77.04 | 9,900 |
| 12 | கடை எண்.12 | 127.29 | 77.04 | 9,900 |
| 13 | கடை எண்.13 | 45.95 | 77.04 | 3,600 |
| 14 | கடை எண்.14 | 127.29 | 77.04 | 9,900 |
| 15 | கடை எண்.15 | 60.26 | 77.04 | 4,700 |
| 16 | கடை எண்.16 | 60.26 | 77.04 | 4,700 |
| 17 | கடை எண்.17 | 54.23 | 77.04 | 4,200 |
| 18 | கடை எண்.18 | 56.38 | 77.04 | 4,400 |
| 19 | கடை எண்.19 | 70.70 | 77.04 | 5,500 |
| 20 | கடை எண்.20 | 63.81 | 77.04 | 5,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | கடை எண்.21 | 60.26 | 77.04 | 4,700 |
| 22 | கடை எண்.22 | 60.26 | 77.04 | 4,700 |
| 23 | கடை எண்.23 | 60.26 | 77.04 | 4,700 |
| 24 | கடை எண்.24 | 60.26 | 77.04 | 4,700 |
| 25 | கடை எண்.25 | 60.26 | 77.04 | 4,700 |
| 26 | கடை எண்.26 | 60.26 | 77.04 | 4,700 |
| 27 | கடை எண்.27 | 45.95 | 77.04 | 3,600 |
| 28 | கடை எண்.28 | 59.31 | 77.04 | 4,600 |
| 29 | கடை எண்.29 | 60.26 | 77.04 | 4,700 |
| 30 | கடை எண்.30 | 60.26 | 77.04 | 4,700 |
| 31 | கடை எண்.31 | 60.26 | 77.04 | 4,700 |
| 32 | கடை எண்.32 | 54.23 | 77.04 | 4,200 |
| 33 | கடை எண்.33 | 56.38 | 77.04 | 4,400 |
| 34 | கடை எண்.34 | 70.70 | 77.04 | 5,500 |
| 35 | கடை எண்.35 | 63.81 | 77.04 | 5,000 |
| 36 | கடை எண்.36 | 47.77 | 77.04 | 3,700 |
| 37 | கடை எண்.37 | 47.77 | 77.04 | 3,700 |
| 38 | கடை எண்.38 | 47.77 | 77.04 | 3,700 |
| 39 | கடை எண்.39 | 47.77 | 77.04 | 3,700 |
| 40 | கடை எண்.40 | 47.77 | 77.04 | 3,700 |
| 41 | கடை எண்.41 | 47.77 | 77.04 | 3,700 |
| 42 | கடை எண்.42 | 36.48 | 77.04 | 2,900 |
| 43 | கடை எண்.43 | 47.13 | 77.04 | 3,700 |
| 44 | கடை எண்.44 | 47.77 | 77.04 | 3,700 |
| 45 | கடை எண்.45 | 47.77 | 77.04 | 3,700 |
| 46 | கடை எண்.46 | 47.77 | 77.04 | 3,700 |
| 47 | கடை எண்.47 | 43.10 | 77.04 | 3,400 |
| 48 | கடை எண்.48 | 43.10 | 77.04 | 3,400 |
| 49 | கடை எண்.49 | 56.81 | 77.04 | 4,400 |
| 50 | கடை எண்.50 | 49.93 | 77.04 | 3,900 |
| 51 | கடை எண்.51 | 47.77 | 77.04 | 3,700 |
| 52 | கடை எண்.52 | 47.77 | 77.04 | 3,700 |
| 53 | கடை எண்.53 | 47.77 | 77.04 | 3,700 |
| 54 | கடை எண்.54 | 47.77 | 77.04 | 3,700 |
| 55 | கடை எண்.55 | 47.77 | 77.04 | 3,700 |
| 56 | கடை எண்.56 | 47.77 | 77.04 | 3,700 |
| 57 | கடை எண்.57 | 37.44 | 77.04 | 2,900 |
| 58 | கடை எண்.58 | 48.42 | 77.04 | 3,800 |
| 59 | கடை எண்.59 | 49.17 | 77.04 | 3,800 |
| 60 | கடை எண்.60 | 49.17 | 77.04 | 3,800 |
| 61 | கடை எண்.61 | 49.17 | 77.04 | 3,800 |
| 62 | கடை எண்.62 | 43.10 | 77.04 | 3,400 |
| 63 | கடை எண்.63 | 43.10 | 77.04 | 3,400 |
| 64 | கடை எண்.64 | 56.81 | 77.04 | 4,400 |
| 65 | கடை எண்.65 | 49.93 | 77.04 | 3,900 |
| 66 | கடை எண்.66 | 129.60 | 77.04 | 10,000 |
| 67 | கடை எண்.67 | 129.60 | 77.04 | 10,000 |
| 68 | கடை எண்.68 | 129.60 | 77.04 | 10,000 |
| 69 | கடை எண்.69 | 129.60 | 77.04 | 10,000 |
| 70 | கடை எண்.70 | 129.60 | 77.04 | 10,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 71 | கடை எண்.71 | 129.60 | 77.04 | 10,000 |
| 72 | கடை எண்.72 | 119.70 | 77.04 | 9,300 |
| 73 | கடை எண்.73 | 129.60 | 77.04 | 10,000 |
| 74 | கடை எண்.74 | 133.21 | 77.04 | 10,300 |
| **முதல் தளம்** | | | | |
| 1 | கடை எண்.1 | 129.60 | 75.63 | 9,900 |
| 2 | கடை எண்.2 | 129.60 | 75.63 | 9,900 |
| 3 | கடை எண்.3 | 129.60 | 75.63 | 9,900 |
| 4 | கடை எண்.4 | 129.60 | 75.63 | 9,900 |
| 5 | கடை எண்.5 | 129.60 | 75.63 | 9,900 |
| 6 | கடை எண்.6 | 129.60 | 75.63 | 9,900 |
| 7 | கடை எண்.7 | 119.70 | 75.63 | 9,100 |
| 8 | கடை எண்.8 | 129.60 | 75.63 | 9,900 |
| 9 | கடை எண்.9 | 133.21 | 75.63 | 10,100 |
| 10 | கடை எண்.10 | 127.29 | 75.63 | 9,700 |
| 11 | கடை எண்.11 | 127.29 | 75.63 | 9,700 |
| 12 | கடை எண்.12 | 127.29 | 75.63 | 9,700 |
| 13 | கடை எண்.13 | 45.95 | 75.63 | 3,500 |
| 14 | கடை எண்.14 | 127.29 | 75.63 | 9,700 |
| 15 | கடை எண்.15 | 60.26 | 75.63 | 4,600 |
| 16 | கடை எண்.16 | 60.26 | 75.63 | 4,600 |
| 17 | கடை எண்.17 | 54.23 | 75.63 | 4,200 |
| 18 | கடை எண்.18 | 56.38 | 75.63 | 4,300 |
| 19 | கடை எண்.19 | 70.70 | 75.63 | 5,400 |
| 20 | கடை எண்.20 | 63.81 | 75.63 | 4,900 |
| 21 | கடை எண்.21 | 60.26 | 75.63 | 4,600 |
| 22 | கடை எண்.22 | 60.26 | 75.63 | 4,600 |
| 23 | கடை எண்.23 | 60.26 | 75.63 | 4,600 |
| 24 | கடை எண்.24 | 60.26 | 75.63 | 4,600 |
| 25 | கடை எண்.25 | 60.26 | 75.63 | 4,600 |
| 26 | கடை எண்.26 | 60.26 | 75.63 | 4,600 |
| 27 | கடை எண்.27 | 45.95 | 75.63 | 3,500 |
| 28 | கடை எண்.28 | 59.31 | 75.63 | 4,500 |
| 29 | கடை எண்.29 | 60.26 | 75.63 | 4,600 |
| 30 | கடை எண்.30 | 60.26 | 75.63 | 4,600 |
| 31 | கடை எண்.31 | 60.26 | 75.63 | 4,600 |
| 32 | கடை எண்.32 | 54.23 | 75.63 | 4,200 |
| 33 | கடை எண்.33 | 56.38 | 75.63 | 4,300 |
| 34 | கடை எண்.34 | 70.70 | 75.63 | 5,400 |
| 35 | கடை எண்.35 | 63.81 | 75.63 | 4,900 |
| 36 | கடை எண்.36 | 47.77 | 75.63 | 3,700 |
| 37 | கடை எண்.37 | 47.77 | 75.63 | 3,700 |
| 38 | கடை எண்.38 | 47.77 | 75.63 | 3,700 |
| 39 | கடை எண்.39 | 47.77 | 75.63 | 3,700 |
| 40 | கடை எண்.40 | 47.77 | 75.63 | 3,700 |
| 41 | கடை எண்.41 | 47.77 | 75.63 | 3,700 |
| 42 | கடை எண்.42 | 36.48 | 75.63 | 2,800 |
| 43 | கடை எண்.43 | 47.13 | 75.63 | 3,600 |
| 44 | கடை எண்.44 | 47.77 | 75.63 | 3,700 |
| 45 | கடை எண்.45 | 47.77 | 75.63 | 3,700 |

| | | | | |
|---|---|---|---|---|
| 46 | கடை எண்.46 | 47.77 | 75.63 | 3,700 |
| 47 | கடை எண்.47 | 43.10 | 75.63 | 3,300 |
| 48 | கடை எண்.48 | 43.10 | 75.63 | 3,300 |
| 49 | கடை எண்.49 | 56.81 | 75.63 | 4,300 |
| 50 | கடை எண்.50 | 49.93 | 75.63 | 3,800 |
| 51 | கடை எண்.51 | 47.77 | 75.63 | 3,700 |
| 52 | கடை எண்.52 | 47.77 | 75.63 | 3,700 |
| 53 | கடை எண்.53 | 47.77 | 75.63 | 3,700 |
| 54 | கடை எண்.54 | 47.77 | 75.63 | 3,700 |
| 55 | கடை எண்.55 | 47.77 | 75.63 | 3,700 |
| 56 | கடை எண்.56 | 47.77 | 75.63 | 3,700 |
| 57 | கடை எண்.57 | 37.44 | 75.63 | 2,900 |
| 58 | கடை எண்.58 | 48.42 | 75.63 | 3,700 |
| 59 | கடை எண்.59 | 49.17 | 75.63 | 3,800 |
| 60 | கடை எண்.60 | 49.17 | 75.63 | 3,800 |
| 61 | கடை எண்.61 | 49.17 | 75.63 | 3,800 |
| 62 | கடை எண்.62 | 43.10 | 75.63 | 3,300 |
| 63 | கடை எண்.63 | 43.10 | 75.63 | 3,300 |
| 64 | கடை எண்.64 | 56.81 | 75.63 | 4,300 |
| 65 | கடை எண்.65 | 49.93 | 75.63 | 3,800 |
| 66 | கடை எண்.66 | 129.60 | 75.63 | 9,900 |
| 67 | கடை எண்.67 | 129.60 | 75.63 | 9,900 |
| 68 | கடை எண்.68 | 129.60 | 75.63 | 9,900 |
| 69 | கடை எண்.69 | 129.60 | 75.63 | 9,900 |
| 70 | கடை எண்.70 | 129.60 | 75.63 | 9,900 |
| 71 | கடை எண்.71 | 129.60 | 75.63 | 9,900 |
| 72 | கடை எண்.72 | 119.70 | 75.63 | 9,100 |
| 73 | கடை எண்.73 | 129.60 | 75.63 | 9,900 |
| 74 | கடை எண்.74 | 133.21 | 75.63 | 10,100 |

எனவே, மேற்படி இனத்திற்கு பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகைதாரர் வசம் ஒப்படைப்பு செய்வதற்கும், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் முடிய உள்ள காலத்திற்கு அனுமதி கோரியும் , மாநகராட்சியின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்குரிய பொதுக்கட்டுப்பாடுகள், சிறப்புகட்டுப்பாடுகள், தனிகட்டுப்பாடுகள் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள்வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. வரிசை எண் 1 முதல் 74 வரை உள்ள கடைகள் (தரைத்தளம் மற்றும் முதல்தளம்) மாத வாடகை அடிப்படையில் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி இனங்களுக்குரிய மாநகராட்சியின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி க்குரிய பொதுக்கட்டுப்பாடுகள், சிறப்புக்கட்டுப்பாடுகள், தனிக்கட்டுப்பாடுகளை அனுமதிக்கலாம்.
3. ந.நி.ம.கு.வ.துறை அரசாணை எண்.92/2007ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் முடிய உள்ள காலத்திற்கு அனுமதி அளிக்கலாம்.
4. கடைகளுக்கான பொறுப்பு தொகையினை சதுரடியின் கீழ் ரூ.50,000/- முதல் 1,50,000/- வரை நிர்ணயம் செய்யலாம்.
5. ஏற்கனவே செயல்பட்டுவந்த மீன் சந்தையில் புதிதாக கட்டடப்பணிகள் நடைபெற்று வருவதால் தற்காலிகமாக காந்தி சந்தை எதிர்புறம் உள்ள டைமண்ட் ஜூப்ளி வளாகத்தில் மீன் சந்தை 01.04.2022 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், தற்போது மேற்படி குத்தகை இனம் 30.06.2023 வரை நீட்டிக்கப்பட்டு குத்தகைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
6. பொது / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும், ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்குரிய படிவம், புதிய ஏல நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கியவற்றை மெசர்ஸ்.தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ செர்வு திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்தின் மூலம் அச்சடித்து பெற்றுக்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி அளிக்கலாம்.

<u>அ1 / 02228 / 2023(வா.குஅ.II)</u>

**தீர்மானம் எண்.300 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:21

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,வார்டுக் குழு 2-க்கு உட்பட்ட குத்தகை இனமானகாந்தி சந்தை பகுதியில் உள்ள மூன்று கட்டண கழிப்பிடங்கள் மற்றும்டைமண்ட் ஜூப்ளி அருகில் உள்ள கழிப்பிடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமத்திற்கு 22.02.2023 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு

| வ. எண். | இனம் | ஏலம் /ஒப்பந்தப் புள்ளி கோரியவர் விபரம் | இந்த ஆண்டு (2024-2025) ஒப்பந்தப் புள்ளி / ஏலத் தொகை ரூ. | நடப்பு ஆண்டுகு த்தகை தொகை யை விட கூடுதல் / குறைவு ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | காந்தி சந்தை பகுதியில் உள்ள மூன்று கட்டண கழிப்பிடங்கள் மற்றும்டைமண்ட் ஜூப்ளி அருகில் உள்ள கழிப்பிடத்தில் தினசரி கட்டணம் வசூல்செய்து கொள்ளும் உரிமம் | 1. திரு. V.முருகேசன் த/பெ.வேணு கோபால் நெ.2, எடத்தெரு, பாலக்கரை, திருச்சி | 52,00,000 | குறைவு 3,50,000 | திருச்சிராப்பள்ளிமாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் 2-க்கு உட்பட்ட காந்தி சந்தை பகுதியில் உள்ள மூன்று கட்டண கழிப்பிடங்கள் மற்றும்டைமண்ட் ஜூப்ளி அருகில் உள்ள கழிப்பிடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமத்திற்கு 22.02.2023 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.மேற்படி ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் 4 நபர்கள்மட்டுமே கலந்துக்கொண்டு ஒப்பந்தப்புள்ளி அளித்தனர். அவற்றில் திரு.V.முருகேசன்என்பவர் ரூ.52,00,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி தொகை அளித்துள்ளார். இதர மூவர்அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை காட்டிலும் திரு.V.முருகேசன் அளித்துள்ள கூடுதலாகஉள்ளது.ஆனால், கடந்த ஆண்டு திரு.C.சரவணன் என்பவர் அளித்திருந்த குத்தகை தொகையைவிட 3,50,000/- லட்சம் குறைவாக உள்ளது. இருப்பினும் இந்நிலையில் கடந்த ஆண்டுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டபோது ஏலத்தில் உச்சபட்ச கேள்வித் தொகையாகரூ.55,50,000/- கோரிய திரு.C.சரவணன் என்பவருக்கு உரிமம் அளிக்கப்பட்டது. ஆனால்அவருக்கு இக்குத்தகையால் பெரு நஷ்டம் ஏற்பட்டதாலும் மேற்படி கட்டணகழிப்பிடங்களில் போதிய வருவாய் இல்லாததாலும் தொடர்ந்து கட்டண கழிப்பிடத்தை நடத்தமுடியவில்லை என தொடர்ந்து 31.01.2023ந் தேதியன்று கடிதம் அளித்து விட்டதால்தனியரது உரிமத்தை ரத்து செய்து அவர் செலுத்திய முன்வைப்புத் தொகை ரூ.10.00 லட்சம் பறிமுதல் (forfeiture) செய்யப்பட்டது. மேலும், 20.12.2022 முதல்துறைமூலம் வசூல் செய்யப்பட்டுவருகிறது. எனவே, தற்போது நம் துறை மூலம் கட்டணகழிப்பிட கட்டணம் வசூல் செய்யப்பட்டுகின்றன. இதனால் ரசீதுகள் அச்சடிப்புகட்டணம், வசூல் மற்றும் போதிய மாநகராட்சி பணியாளர்கள் மேற்படி பணிக்கு இல்லாதகாரணத்தாலும் மாநகராட்சிக்கு பராமரிப்பு செலவினம் அதிகமாகிறது. மேலும், மாநகராட்சி மூலம் துறை வசூல் செய்யப்படும் நேர்வில் தினசரி வசூல் குறைவுஏற்படும் நிலை ஏற்படுவதை தவிர்க்கவும், நிர்வாக நலன் கருதியும் திரு.V.முருகேசன் என்பவர் தற்போது அளித்துள்ளஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.52,00,000/-ஐ ஏற்கலாம். |
| | | 2. திரு. R.ரஞ்சித்குமார் த/பெ.P.ராமச்சந்திரன் 14/4, தாதன் பிள்ளையார் கோவில் தெரு, நரசிங்கமங்களம், சு.கண்ணனூர், மண்ணச்சநல் லூர் தாலுகா, திருச்சி மாவட்டம் | 45,00,000 | --- | |
| | | 3.V.வினித் த/பெ.வீரப்பன் நெ.87, தேவர் காலனி, தில்லை நகர், திருச்சி-18 | 51,08,766 | --- | |
| | | 4.T.இளங்கோவன் த/பெ.L.தங்கராஜன் 106, முதல் மெயின் ரோடு, ராஜா காலனி, கலெக்டர் ஆபீஸ் ரோடு, திருச்சி-01 | 35,00,000 | --- | |

மேற்காணும் பட்டியலில் கலம் எண் 6ல் குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் மேற்படி இனத்திற்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை அளித்துள்ள திரு.V.முருகேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும் தனியர் 2023-2024ம் ஆண்டிற்கு உரிய குத்தகை தொகை செலுத்தியுள்ளதால் 01.04.2023 முதல் தனியருக்கு மேற்படி இனத்தை ஒப்படைப்பு செய்துள்ளதை பின்னேற்பு செய்தும் மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

நிர்வாக நலன் கருதியும், துறைவசூலை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி இனத்திற்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை அளித்துள்ள திரு.V.முருகேசன் என்பவருக்கு இனத்தைஒப்படைப்பு செய்ததற்கு அனுமதி அளிக்கலாம்.

**அ1/ 004870 / 2022(வா.குஅ.2)**

**தீர்மானம் எண்.301 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:22**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கட்டுப்பாட்டில் அமைந்துள்ள பொன்மலைப்பட்டி சமுதாய கூடத்தினை இடித்து கட்டிட கழிவுகள், மரஜன்னல்கள், இரும்பு சாமான்கள் ஆகியவைகளை "உள்ளது உள்ளபடி என்ற அடிப்படையில் இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏலத்தில் விடுவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.43 நாள்.31.01.2023ந் தேதிய ஒப்புதலின்படி, தினசரி நாளிதழ் மற்றும் அனைத்து கோட்டங்கள் மற்றும் மைய அலுவலக விளம்பர பலகைகளில் விளம்பரம் செய்யப் பட்டு ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏல அறிவிப்பு எண்.10/2023-24ன் வாயிலாக 25.04.2023அன்று முதன் முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

பொன்மலைப்பட்டி சமுதாய கூடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியை பொறுத்தமட்டில் 2 நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது அதன் விபரங்கள் பின்வருமாறு.

| வ.எண் | இனங்களின் விபரம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி | ஏலதாரர்/ ஒப்பந்தப்புள்ளி கோரிய நபர்கள் விபரம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | இறுதி சுற்று / ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1) | வார்டு குழு அலுவலகம் III க்கு உட்பட்ட வார்டு எண்.46 பொன்மலைப் பட்டியில் பழுதடைந்த கட்டிட கழிவுகள், ஜன்னல்கள், மரக்கதவுகள், மற்றும் இரும்பு சாமான்கள் ஆகியவற்றை அப்புறப்படுத்தும்பணி | ஒப்பந்தப்புள்ளி | **S.அப்துல்வஹாப் AFZAL TRADERS TRICHY** | ரூ,30000./- State Bank of India DD No.784247 Dt.21.04.2023 | **ரூ..2,78,000/- + GST 18% (1.83%) அதிகம்** |
| | | ஒப்பந்தப்புள்ளி | **A.மீராமொய்தீன் K.A TIMBER TRADERS, TRICHY** | ரூ,30000./- Kotak Mahendra Bank DD No.121931 Dt.24.04.2023 | **ரூ.2,85,000/- + GST 18% (4.40%) அதிகம்** |

மேற்கண்ட 2 நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு. A.மீராமொய்தீன் K.A TIMBER TRADERS, TRICHY என்பவர் ரூ.2,85,000/-ம் சரக்கு & சேவை வரி (18%) ரூ. 51,300/- ஆக மொத்தம் **ரூ.3,36,300/-** உயர்ந்தபட்ச தொகையாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் சம்மந்தப்பட்ட இருப்பு / சொத்து பதிவேடுகளில் இருந்து நீக்கம் செய்யவும் அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்ட 2 நிறுவனங்களில் உயர்ந்தபட்ச தொகை கோரியுள்ள திரு.A,மீராமொய்தீன் K.A TIMBER , TRADERS, TRICHY அவர்களின் ஒப்பந்த தொகை ரூ.285000/- +GST ரூ.51,300/-(18%) ஆக மொத்தம் ரூ.336300/-ஐ ஏற்று வேலை உத்தரவு வழங்க அனுமதி அளிக்கலாம்.
2. கட்டிடத்தை முற்றிலுமாக இடித்து அப்புறப்படுத்தப்பட்ட பிறகு சம்மந்தப்பட்ட இருப்பு சொத்து பதிவேடுகளில் இருந்து நீக்கம் செய்ய அனுமதி அளிக்கலாம்.

**இ1/1345/2023(ம-3)**

**தீர்மானம் எண்.302 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:23**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம்.IV, வார்டு எண்.53க்குட்பட்ட ஏ.ஜே.எஸ். லூர்துசாமிபிள்ளை மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) திருச்சிராப்பள்ளி என்ற அலுவலகத்திற்கு 01.01.2022 முதல் மாதவாடகை நிர்ணயம் செய்து தெரிவிக்கக்கோரி தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ), தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம்–II, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட, அலுவலகம்26–3 x 26–3 அளவில் (689.6 சதுரஅடி) உள்ள கட்டிடத்திற்கு தற்போது நில மதிப்பீட்டின்படியும் பொது வாடகை வழிகாட்டுதல் மதிப்பீட்டின்படியும் மாத வாடகை சதுர அடிக்கு ரூ.53.53 வீதம் 689.06 சதுர அடிக்கு ரூ.36,886/– யாக நிர்ணயம் செய்யலாம் என்று பொறியியற் பிரிவிலிருந்து வரப்பெற்று கணக்கீட்டு படிவம் மற்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து மேற்கண்ட அலுவலகத்திற்கு மாத வாடகையாக ரூ.36886/– என நிர்ணயம் செய்து இத்துடன் சேவை வரியுடன் வசூல் செய்யவும், அரசாணை எண்.135, நாள்.13.07.1994ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதியுடன் ஏ.ஜே.எஸ். லூர்துசாமிபிள்ளை மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் இயங்கி வரும் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ), தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம்–II, திருச்சிராப்பள்ளி அலுவலகத்திற்கு 01.01.2022 முதல் மாதவாடகை ரூ.36886/– மற்றும் சேவைவரியுடன் நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மாதவாடகை ரூ.36886/– என நிர்ணயம் செய்து, சேவை வரியுடன் சேர்த்து வசூலிக்கவும், அரசாணை (நிலை) எண்.285, நாள்.29.04.1985, அரசாணை (நிலை) எண்.857, நாள்.21.07.1986, அரசாணை எண்.135 நாள்.13.07.1994ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.
2. ஏ.ஜே.எஸ். லூர்துசாமிபிள்ளை மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) திருச்சிராப்பள்ளி என்ற அலுவலகத்திற்கு மாதவாடகை நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மாதவாடகை நிர்ணயம் செய்யலாம்.

**1775 /2023/அ1 (ம.IV))**

**தீர்மானம் எண்.303 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:24**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்5, வார்டு எண்.27க்குட்பட்ட புத்தூர் சின்ன மைதானத்தில் சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தின் கீழ் ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. வணிக வளாகமானது 54784.00 சதுர அடி இடப்பரப்பில் கீழ்வரும் பரப்பளவில் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| தரைகீழ்தளம் | – | 28170.65 ச.அடி (இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம்) |
| தரைத்தளம் | – | 22672,72 ச.அடி |
| முதல்தளம் | – | 14771,97 ச.அடி |
| இரண்டாம்தளம் | – | 21929,74 ச,அடி |
| மொத்தம் | – | 87545,08 ச,அடி |

மேற்படி வணிக வளாகத்தினை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு தளமாகவோ வாடகைக்கு எடுக்க விரும்பும் அரசு துறைகள் / தனியார் வணிக நிறுவனங்களின் விண்ணப்பங்கள் கோர அனுமதி வேண்டியும், பொதுப்பணித்துறை அரசின் வழிகாட்டி மதிப்பின்படி ஒரு சதுர அடிக்கு வாடகை ரூ.45/– என நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டியும், இக்கட்டிடத்திற்கு பலர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து மாநகராட்சி சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு மாமன்றத்தின் அனுமதியுடன் கட்டிடத்தினை வாடகைக்கு விட அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதி வழங்கலாம்,

**அ1/5475/2023(வா.கு.அ.5 )**

**தீர்மானம் எண்.304 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:25**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5 வார்டு எண்.08ல் உள்ள உறையூர், குழுமணி சாலையில் காசி விளங்கி மீன்சந்தையில் கட்டப்பட்டுள்ள 25 சில்லறை மீன் விற்பனைக் கடைகளில் காலியாக உள்ள 22, 23, 24, 25 ஆகிய 4 கடைகளுக்கும் மற்றும் மாமன்றத்தீர்மானம் எண்.85, நாள்.28.02.2023 தீர்மானத்தின்படி பயன்பாடு மாற்றம் செய்யப்பட்ட கடை எண்கள்.26, 27, 29 ஆகிய கடைகளுக்கும் 13.04.2023 தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையின் வாயிலாக நாளேடுகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து 25.04.2023 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

கடை எண்கள். 22,23,24,26,27,29 ஆகிய கடைகளுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.25க்கு ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் இருவர் கலந்து கொண்டனர். அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தப் புள்ளியில் கோரப்பட்ட கடை எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் மற்றும் முகவரி | வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட மாத வாடகைத் தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 25 | திரு. ம. கார்த்திகேயன் த/பெ எஸ்.மனோகர், க,எண்.4/100, சீனிவாச நல்லூர்', தொட்டியம், திருச்சி. செல் நெ.9994276009. | ரூ.1,00,000/– வரைவோலை எண்.557568 நாள்.25.04.2023 சிட்டி யூனியன் வங்கி தில்லைநகர் | ரூ.6300/– | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த பட்சத் தொகை ரூ.6300/– ஆகும். இக்கடைக்கு ஏற்கனவே மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ.4450/–ஐ விட ரூ.1850/– கூடுதலாக உள்ளது. எனவே, உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.6300/– கோரிய திரு.ம,கார்த்திகேயன் என்பவருக்கு கடையை ஒப்படைப்பு செய்யலாம். |
| 2 | 25 | திரு. ஜி.பிரசன்ன வெங்கடேசன், த/பெ. என்.கோவிந்தராஜ் நெ.44, வலம்புரி நகர், பிராட்டியூர், திருச்சி–9 செல் நெ.7010572782 | ரூ.1,00,000/– வரைவோலை எண்.818934 நாள்.25.04.2023 இந்தியன் வங்கி கிராப்பட்டி | ரூ.6201/– | |

கடை எண்.25க்கு மேலே கண்ட பட்டியலில் கலம் 6ல் கண்டுள்ள காரணங்களை ஏற்று 12 மாத வாடகையினை கூடுதல் முன்வைப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு திரு.ம.கார்த்திகேயன் என்பவருக்கு கடை எண்.25ஐ ஒப்படைப்பு செய்யவும், கடை எண்கள்.22,23,24,26,27,29 ஆகிய கடைகளுக்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் திரு.ஜி.பிரசன்ன வெங்கடேசன் என்பவருக்கு வைப்புத் தொகை ரூ.1,00,000/–ஐ திரும்ப வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1, கடை எண்.25க்கு மேலே கண்ட பட்டியலில் கலம் 6ல் கண்டுள்ள காரணங்களை ஏற்று 12 மாத வாடகையினை கூடுதல் முன்வைப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு திரு.ம.கார்த்திகேயன் என்பவருக்கு கடை எண்.25ஐ ஒப்படைப்பு செய்ய அனுமதி வழங்கலாம்.

2, கடைஎண்கள்.22,23,24,26,27,29 ஆகிய கடைகளுக்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

3, திரு.ஜி.பிரசன்ன வெங்கடேசன் என்பவருக்கு வைப்புத் தொகை ரூ.1,00,000/-ஐ திரும்ப வழங்கலாம்.

**15607/2018/அ1 (வா.கு.அ 5)**

**தீர்மானம் எண்.305 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:26

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்-1, வார்டு எண்.14, கதவு எண்.6/3, ஜோசப் கல்லூரி ரோட்டில் அமைந்துள்ள செயிண்ட் ஜோசப் கல்லூரிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கீழ்கண்ட பட்டியலிலுள்ள 14 வரிவிதிப்பு எண்களும் அரசு நிதி பெறும் கல்லூரி கட்டிடங்கள் என்பதால் சொத்துவரி நிர்ணயம் செய்தது ஏற்புடையதல்ல. தமிழ்நாடு மாவட்ட அரசிதழில் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பு தொடர்பாக சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி சுயநிதி கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு மட்டும் சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது. ஆகையால், நிலுவை மற்றும் நடப்பு சொத்துவரி நிலுவையில் உள்ள இனங்கள் சொத்துவரி நீக்கம் (Write off) செய்ய மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பழைய சொத்துவரி விதிப்பு எண் | புதிய சொத்துவரி விதிப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் | நிலுவை மற்றும் நடப்பு தொகை செலுத்தப்படாமல் உள்ள தொகை (2017-2018-II முதல் 2023-2024-II மார்ச் வரை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | 086/010/02473 | 086/014/903067 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/28, Father's Residence | 22,06,542 |
| 2 | 086/010/02500 | 086/014/903073 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/3, New Hostel North Block | 6,36,737 |
| 3 | 086/010/02498 | 086/014/903075 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/5, New Hostel North | 9,25,300 |
| 4 | 086/010/02497 | 086/014/903076 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/6, New Hostel North | 9,25,310 |
| 5 | 086/010/02478 | 086/014/903077 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/7, New Hostel North | 5,98,900 |
| 6 | 086/010/02479 | 086/014/903078 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/8, New Hostel North | 5,98,900 |
| 7 | 086/010/02482 | 086/014/903081 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/11, Dept. of Tamil | 2,75,177 |
| 8 | 086/010/02483 | 086/014/903082 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/12, Administrative Block | 9,44,277 |
| 9 | 086/010/02485 | 086/014/903084 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/14, Dept. of Botany | 7,84,287 |
| 10 | 086/010/02486 | 086/014/903085 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/15, Animals House | 67,227 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 086/010/02491 | 086/014/903090 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/20, Britto Hall | 8,41,137 |
| 12 | 086/010/02493 | 086/014/903092 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/22, Botany Herbal Garden | 1,36,937 |
| 13 | 086/010/02494 | 086/014/903093 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/23, Jubilee Building | 7,76,727 |
| 14 | 086/010/02496 | 086/014/903095 | புரகுரேட்டர் செயின்ட் ஜோசப் கல்லூரி 6/25, School NCC, NSS (Workshop) | 1,87,419 |
| **மொத்தம்** | | | | **ரூ.99,04,877/-** |

எனவே, மேற்கண்ட 14 வரிவிதிப்பு எண்கள் மற்றும் நிலுவை மற்றும் நடப்பு தொகை ரூ.99,04,877/- உள்ள உள்ள சொத்துவரி கேட்பு மற்றும் கணினியில் சொத்துவரி விதிப்பு எண்களை நீக்கம் செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்-1, வார்டு எண்.14, ஜோசப் கல்லூரியில் சுயநிதி பெறும் கல்லூரி கட்டிடங்கள் நீங்கலாக அரசு நிதி பெறும் கல்லூரி கட்டிடங்களுக்கு விதிக்கப்பட்ட நிலுவை மற்றும் நடப்பு சொத்துவரி தொகை செலுத்தாமல் நிலுவையில் உள்ள 14 வரிவிதிப்பு எண்கள் மற்றும் நிலுவைத் தொகை ரூ.99,04,877/- கேட்பு மற்றும் கணினியில் நீக்கம் (Write off) செய்ய மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அ4/ந .க.எண்.6113/2022 (வா.கு.அ-1)**

**தீர்மானம் எண்.306 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:27

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்-1 , வார்டு எண்.03, கதவு 104, 105, கீழ அடையவளஞ்சான் வீதியிலுள்ள கிழக்கு ரெங்க நடுநிலைப்பள்ளியானது அரசு உதவி பெறும் கிழக்கு ரெங்கா நடுநிலைப்பள்ளியாக செயல்பட்டுவருகிறது. சொத்துவரிவிதிப்பு எண்- 086/003/903567 -க்கு சொத்துவரியினை நீக்கிட அரசு உதவி பெறும் கல்வி நிறுவனம் என்பதால், மேற்கண்ட கல்வி நிறுவனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட சொத்துவரி விதிப்பு எண்- 086/003/903567 நீக்கம் செய்து தருமாறு தெரிவித்துள்ளார்.

1. ஜெ.தர்மம்பாள் என்பவரிடமிருந்து ஆவணம் எண்- 2552 / 1999, நாள்.28.07.1999 ல் சர்வே எண்- 1332, 1333, 1336, 1338 அவர்களிடமிருந்து சுத்த கிரையம் செய்யப்பட்டு கிழக்கு ரெங்கா நடுநிலைப்பள்ளியாக செயல்பட்டுவருகிறது. இப்பள்ளி அரசு நிதி உதவி பெறும் பள்ளியாகும்.
2. திருச்சிராப்பள்ளி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1319/அ3/2020, நாள்.22.06.2020.
3. வட்டார கல்வி அலுவரின் செயல்முறைகள் ந.க.எண்.2257/பி4/2016, நாள்.26.12.2016 அரசு உதவி பெறும் பள்ளி.
4. பள்ளிக்கல்வித்துறை அரசாணை எண்.405, நாள்.05.05.1992.

ஸ்ரீரங்கம் கிழக்கு ரெங்கா நடுநிலைப் பள்ளி கதவு எண். 104, 105, திருமதி. ஜெ.தர்மாம்பாள் அவர்கள் தனிப்பட்ட நபருக்கு கிரையம் செய்யாமல் பொது ஸ்தாபனமான ஸ்ரீரங்கம் கிழக்கு ரெங்கா நடுநிலைப்பள்ளி பயனடைய வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் மேற்படி இடத்தை ஸ்ரீரங்கம் மேல்நிலைப் பள்ளி அதன் பொறுப்பாளராகிய தாளாளர்/செயலாளர் அவர்கள் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்.

மேற்கண்ட பள்ளி வரிவிதிப்பு எண்.086/003/903567 -க்கு 2000-2001 முதல் 2023-2024 வரை கேட்பு ரூ.50684/- உள்ளது.

பிரிவு –126 பொது விலக்கு அளிக்கப்பட்ட இனங்கள் மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கல்வி நோக்கங்களுக்கு பயன்படும் கட்டடங்கள் மற்றும் மாணவர்களின் கல்வியை பொருத்து தங்கும் விடுதிகள் ஆதரவற்றோர் மற்றும் அனாதை சிறுவர்கள் தங்குவதற்கென்று தர்ம நோக்கங்களுக்காக கட்டி விடப்பட்ட இடங்கள், காது கேளாதவர் மற்றும் வாய் பேச முடியாதவர்களுக்கு கட்டப்பட்ட பள்ளிகள் மற்றும் கருணை இல்லங்கள் கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் மற்றும் வயதான முதியவர்கள் தங்குவதற்குரிய ஆசிரிமங்கள் மற்றும் இது போன்ற தர்ம நோக்குடன் கட்டப்பட்ட கட்டடங்கள் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட கல்வி நிறுவனமானது மாநில அரசின் உதவி பெறும் கல்வி நிறுவனம் ஆகும். இந்த கல்வி நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட வரிவிதிப்பு எண்.086/003/903567 மற்றும் நிலுவை கேட்பு தொகை ரூ.50,604/–ஐ கணினியில் நீக்கம் செய்வதற்கு (Write off) மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** எனவே, மேற்கண்ட கல்வி நிறுவனமானது மாநில அரசின் உதவி பெறும் கல்வி நிறுவனம் ஆகும். இந்த கல்வி நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட வரிவிதிப்பு எண்.086/003/903567 மற்றும் கேட்பு தொகை ரூ.50,604/–ஐ கணினியில் நீக்கம் செய்வதற்கு (Write off) அனுமதிக்கலாம்.

**அ2/685 /2022 (ம 1)**

**தீர்மானம் எண்.307 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:28**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம் –2க்குட்பட்ட, வார்டு எண் 32, பாலக்கரை, கதவு எண் 27H, எடத்தெருவில் 3158 சதுரடி பரப்பளவு உள்ள பழைய கட்டடத்தில் செயல்பட்டுவரும் திருச்சிராப்பள்ளி மாவட்ட சிறை மீண்டோர் நலச் சங்கத்திற்கு சொத்து வரியாக 2008–2009 முதல் அரையாண்டில் இருந்து 2022–2023 இரண்டாம் அரையாண்டு வரை நிலுவையாக இருந்து வரும் சொத்துவரி ரூ.53,812/– செலுத்தக் கோரி கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது. (Discharged Prisoners's Aids Society Trichy)

இந்நிலையில், மேற்படி கட்டடம் சிறையில் இருந்து மீண்டோர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தி தரும் இடமாக இருப்பதாலும், போதிய நிதி வசதி இல்லாத காரணத்தாலும் மாவட்ட சிறை மீண்டோர் நலச் சங்க செயலாளர் மேற்படி வரிவிதிப்பு எண்ணுக்குரிய சொத்து வரியினை தள்ளுபடி செய்யக் கோரி 18.10.2022ம் தேதியில் கடிதம் அளித்துள்ளார். அவரது கடிதத்தில் (செயலர் / பொருளாளர் திருச்சிராப்பள்ளி மாவட்ட சிறை மீண்டோர் நலச் சங்கம் (Discharge Prisoner's Aids Society) DPAS கலையரங்க வளாகம், 15D, மெக் டொனால்டு ரோடு, கன்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி–620001). மேலும், மாவட்ட சிறை மீண்டோர் நலச் சங்க குழுக் கூட்டம் கடந்த 14.07.2022 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், தலைமையில் நடைபெற்றது என்றும் அக்கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்களும் கலந்து கொண்டார் என்றும், அக்கூட்டத்தில் சொத்துவரி நீக்கம் செய்வது தொடர்பாக விவாதிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இப்பொருள் குறித்து வருவாய் பிரிவு அலுவலர் மூலம் மேற்படி இடத்தினை நேராய்வு செய்ததில் அக்கட்டடத்தில் வீடு மற்றும் கடைகள் செயல்பட்டு வருகின்றன என்பதும் கண்டறியப்பட்டது. மேலும், சிறையில் இருந்து வெளிவரும் வறிய நிலையில் திக்கற்றோராக உள்ள நபர்கள் வாழ்வில் முன்னேறவும், மீண்டும் அவர்கள் சமுதாயத்தில் ஒழுக்கத்துடன் வாழவும் வழிவகை செய்வதற்கு மாநகராட்சியின் பங்களிப்பாக மேற்படி இனத்திற்குரிய சொத்து வரியினை நீக்கம் செய்ய (Discharged Prisoner's Aids Society, Trichy – புதிய சொத்துவரி விதிப்பு எண் 086/032/900063, பழைய சொத்துவரி விதிப்பு எண் 086/99190001 ) மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி இடம் திருச்சிராப்பள்ளி மாவட்ட சிறை மீண்டோர் நலச் சங்கம் நிர்வகித்து வருவதாலும், போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் மாவட்ட சிறை மீண்டோர் நலச் சங்க செயலாளர், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் நடைபெற்ற மாவட்ட சிறை மீண்டோர் நலச் சங்க கூட்டத்தில் தெரிவித்து உள்ளதாலும் மேற்படி இனத்திற்குரிய சொத்துவரி Discharged Prisoner's Aids Society, Trichy – புதிய சொத்துவரி விதிப்பு எண் 086/032/900063, பழைய சொத்துவரி விதிப்பு எண் 086/99190001 கணினி மற்றும் கேட்பு பதிவேட்டில் நீக்கம் செய்யவும் மற்றும் அதற்குரிய நிலுவைத் தொகையை ரூ.53,812/– தள்ளுபடி செய்யவும் அனுமதி வழங்கலாம்.

<u>அ1 / 04751 / 2022 (வா.கு.அ.II)</u>

**தீர்மானம் எண்.308 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:29**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் –IIக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022–23ன்கீழ், கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு மண்டலம் 2 வார்டு குழு தீர்மானம் எண்.29 மற்றும் 30 நாள்.23.02.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.589/2022–23ன் வாயிலாக 06.04.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.30க்குட்பட்ட காந்தி சந்தை எதிர்புறம் உள்ள போர் நினைவுத்தூண் (War Memorial) சுற்று சுவரில் SS கிரில் அமைத்து மராமத்து பணி மதிப்பீடு ரூ.5.00 லட்சம்<br>இ3/ 588 /2023 (மையம்) | **எஸ்.பெரியசாமி, திருச்சி**<br>மதிப்பீட்டு விலை<br><br>**எஸ்.கோவிந்தராஜ், திருச்சி**<br>3.16% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளி களில் **திரு.எஸ்.பெரியசாமி, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டு விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.. |
| 2 | வருவாய் பிரிவிற்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்குதல் மற்றும் 50வது வார்டு சுகாதார மேற்பார்வையாளருக்கு அலுவலக அறை மற்றும் தளவாட பொருட்கள் வைக்கும் அறை அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.8.70 லட்சம்<br>இ3/ 589 /2023 (மையம்) | **எஸ்.பெரியசாமி, திருச்சி**<br>மதிப்பீட்டு விலை<br><br>**பி.ஜெயலெட்சுமி, திருச்சி**<br>1.35% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளி களில் **திரு.எஸ்.பெரியசாமி, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டு விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.. |

**அலுவலகக் குறிப்பு:** **1.** மண்டலம் 2 வார்டு குழு தீர்மானம் எண்.29 மற்றும் 30 நாள்.23.02.2023ல் இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2.மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/ 588 /2023 (மையம்)**

**தீர்மானம் எண்.309 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்:30**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம்–IIIக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022–23ன் கீழ், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு, வார்டுக்குழு தலைவரின் தீர்மான எண்.70, நாள்.28.02.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.588 / 2022–23 ன் வாயிலாக 31.03.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரீசிலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.44,45 மற்றும் 46க்குட்பட்ட பகுதிகளில் செல்லும் குடிநீர் உந்துக்குழாய் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்பட்டுள்ள கசிவுகளை சரிசெய்யும் பணி<br><br>மதிப்பீடு ரூ.8.85 இலட்சம்<br>**இ4/812/2023 (மையம்)** | 1. மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி 0.06% குறைவு<br><br>2. திரு.ஜி.ஜி.சக்திவேல், திருச்சி 0.89% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.41க்குட்பட்ட காவேரி நகர் அருகிலும்,அம்பேத்கார் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் பகிர்மானக் குழாயிலும், மற்றும் வார்டு எண்.40க்குட்பட்ட திருவெறும்பூர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் குடிநீர் உந்துக்குழாயிலும் ஏற்பட்டுள்ள கசிவுகளை சரிசெய்யும் பணி<br><br>மதிப்பீடு ரூ.4.95 இலட்சம்<br>**இ4/810/2023 (மையம்)** | 1. மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி 0.05% குறைவு<br><br>2. திரு.ஜி.ஜி.சக்திவேல், திருச்சி 0.20% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. வார்டுக்குழு தீர்மான எண்.70, நாள்.28.02.2023ல் இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 812/2023 / மையம்**

**தீர்மானம் எண்.310 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:31

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022–23ன் கீழ், ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 5 / 2023–24 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 25.04.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.8,10,11 ஆகிய பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் தொட்டிகளுக்கு மேடை அமைத்தல், பழுதடைந்த பவர் பம்புகளை மாற்றி 1.0 மற்றும் 2.0 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்துதல் மற்றும் பழுதடைந்த கைபம்புகளை மாற்றியமைத்தல் மதிப்பீடு ரூ.8.20 இலட்சம் **இ4/15486/2022/மையம்** | 1. மெசர்ஸ். APT கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி மதிப்பீட்டு விலை பேச்சுவார்த்தைக்குப்பின் 0.01% குறைவு)<br><br>2. திரு.R. ராஜ்குமார், திருச்சி 0.31% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். APT கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி** நிறுவனத்தார் **மதிப்பீட்டு விலையில் வழங்கியுள்ளார் ஒப்பந்ததாரருடன் பேச்சு வார்த்தைக்குப் பின் 0.01 சதவீதம் குறைத்து தருவதாக தெரிவித்துள்ளதை** ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.27க்குட்பட்ட மூலைகொல்லை தெரு, அண்ணாமலைபுரம் மற்றும் பாபு செட்டி தெரு பகுதிகளில் பழுதடைந்த குடிநீர் விநியோக குழாய்களை மற்றும் பழுதடைந்த வீட்டிணைப்புகளை மாற்றியமைத்தல் மற்றும் வார்டு எண்.25க்குட்பட்ட பகுதிகளில் செல்லும் 90எம்.எம் விட்டமுள்ள பிவிசி குழாயில் ஏற்பட்டுள்ள கசிவுகளை சரிசெய்யும் பணி மதிப்பீடு ரூ.6.40 இலட்சம் **இ4/813/2023/மையம்** | 1. மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி 0.05% குறைவு<br><br>2. திரு.ஜி.ஜி.சக்திவேல், திருச்சி 0.53% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி** நிறுவனத்தார் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | வார்டு எண்.25க்குட்பட்ட செல்வ நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து செல்லும் விநியோக குழாயில் DI double flanged butterfly valve with electrical actuator வழங்கி, பொருத்தி இயக்கி கொடுக்கும் பணி மதிப்பீடு ரூ.6.40 இலட்சம் **இ4/814/2023/மையம்** | 1. மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி 0.04% குறைவு<br><br>2. திரு.ஜி.ஜி.சக்திவேல், திருச்சி 45.31% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி** நிறுவனத்தார் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

2. மண்டலம் 5ல் வார்டுகுழு தீர்மான எண்.29,30,31 நாள்.27.02.2023ல் இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ4 / 15486 / 2022 / மையம்**

**தீர்மானம் எண்.311 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:32

இம்மாநகராட்சியின் பராமரிப்பின் கீழ் உள்ள நீர்ப்பணிநிலையங்களான கலெக்ட்டர் வெல் நீர்ப்பணி நிலையம் – ஆளவந்தான் படித்துறை, கலெக்ட்டர் வெல் நீர்ப்பணி நிலையம் – எண் 3 – மேலூர், பொது தரை மட்ட கிணறு – ஆண்டவர் ஆசிரமம் ஆகியவை கொள்ளிடம் ஆற்று படுகையில் அமைக்கப்பட்டு அவைகள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 73.00 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்தப்பட்டு, பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நீரேற்று நிலையங்களில் குடிநீரை சுத்தம் செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு – தீர்மான எண்.210 நாள்.29.09.2022 அன்று வழங்கிய ஒப்புதலை தொடர்ந்து சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தை கொள்முதல் செய்து பயன்படுத்தி வந்த நிலையில் ஒப்புதலுக்கான கொள்முதல் அளவுகள் தீர்ந்துவிட்ட காரணத்தால் முதலாம் முறையாக காலநீட்டிப்பு செய்திட மாமன்றம் தனது தீர்மான எண்.174 நாள்.29.03.2023ல் அனுமதி அளித்ததை தொடர்ந்து கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தி வந்த நிலையில் கொள்முதல் அளவுகள் தற்போது முடியும் தருவயில் இருப்பதால், மீண்டும் காலநீட்டிப்பு செய்து உடனடியாக சோடியம் ஹைபோ குளோரைட் திரவத்தை வாங்கி இருப்பில் வைத்து பொதுமக்களின் நலன் கருதி, சாதாரண நாட்களில் 3.00 பி.பி.எம் எனவும், மழை மற்றும் நோய் தொற்று காலங்களில் 4.00 பி.பி.எம் எனவும் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தை பயன்படுத்திட கீழ் கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

4051 லிட்டர் நாள் /X 82 நாட்கள் =3,32,182 லிட்டர்கள்

| | | |
|---|---|---|
| 3,32,182 லிட்டர்கள் X 12.75 / லிட்டர் | ரூ | 42,35,321.00 |
| GST @ 18 % | ரூ | 7,62,358.00 |
| | ரூ | 321.00 |
| ஆக மொத்தம் | ரூ | 49,98,000.00 |
| இந்நிலையில் தற்போதைய சந்தை மதிப்பு | ரூ | 13.55 |
| ஒப்பந்த விலை | ரூ | 12.75 |
| விலை வித்தியாசம் | ரூ | 0.80 |
| கொள்முதல் செய்யவேண்டிய அளவு 3,32,182 லிட்டர்கள் X 0.80 | ரூ | 2,65,746.00 |

காலநீட்டிப்பு செய்வதால் ஏற்படும் சேமிப்பு **ரூ.**2,65,746.00 – ஆகும்

ஆகவே, சோடியம் ஹைபோ குளோரைட் திரவம் வழங்கி வரும் ஒப்பந்த நிறுவனமான மெசர்ஸ் தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சென்னை நிறுவனத்திடம் கேட்டு கொண்டதில் அந்நிறுவனம் ஒப்பந்த விலை விகிதத்திலேயே காலநீட்டிப்பு காலம் வரை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளதை ஏற்கலாம். மேலும் பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கிட வேண்டியதன் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி ஏற்படும் காலதாமதத்தையும், காலநீட்டிப்பு செய்வதால் ஏற்படும் சேமிப்பு ரூ 2,65,746.00 – ஐ கருத்தில் கொண்டும், காலநீட்டிப்பு வழங்கி தொடர்ந்து கொள்முதல் செய்திட ஏற்படும் செலவினம் ரூ.49,98,000.00 –க்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. இப்பணிக்கான செலவின தொகை ரூ.49,98,000.00 – க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. சோடியம் ஹைப்போ குளோரைடு திரவத்தினை ஏற்கனவே வழங்கி வரும் நிறுவனமான மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் மூலமே தொடர்ந்து 82 நாட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமாகிய லிட்டர் ஒன்றுக்கு ரூ.12.75/– வீதம் 3,32,182 லிட்டரை GST வரி 18% உட்பட ரூபாய் 49,98,000.00–க்கு வாங்கி கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிக்கான செலவினத்தை 2023 – 2024 ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் கணக்குத் தலைப்பு எண்.2305009ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2000.00 இலட்சத்திலிருந்து செலவு செய்துக் கொள்ள அனுமதி வழங்கலாம்.

(இ4/ **10547 / 2022** (மையம்)

**தீர்மானம் எண்.312 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:33

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம்-IIIக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022-23ன் கீழ், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு, மாண்புமிகு மேயர் அவர்களது தீர்மான எண்.8, நாள்.15.02.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.586 / 2022-23 ன் வாயிலாக 06.04.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரீசிலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.40, 41 மற்றும் 42க்குட்பட்ட சந்தோஷ் நகர், ஆலத்தூர், அம்பேத்கார் நகர், கீழகல்கண்டார்கோட்டை பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் PLC/SCADA Automation System வடிவமைத்து, வழங்கி, பொருத்தி, மைய அலுவலக SCADA கட்டுப்பாட்டு அறையுடன் இணைத்து இயக்கி கொடுக்கும் பணி மதிப்பீடு ரூ.49.50 இலட்சம் **இ4/15497/2022/மையம்** | 1. மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி 0.05% குறைவு<br>2. திரு.ஜி.ஜி.சக்திவேல், திருச்சி 1.30% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.38, 39 மற்றும் 43க்குட்பட்ட புகழ் நகர், காவேரி நகர் மற்றும் எல்லக்குடி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் PLC/SCADA Automation System வடிவமைத்து, வழங்கி, பொருத்தி, மைய அலுவலக SCADA கட்டுப்பாட்டு அறையுடன் இணைத்து இயக்கி கொடுக்கும் பணி மதிப்பீடு ரூ.36.20 இலட்சம் **இ4/15498/2022/மையம்** | 1. மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி 0.05% குறைவு<br>2. திரு.ஜி.ஜி.சக்திவேல், திருச்சி 1.30% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மான எண்.8, நாள்.15.02.2023ல் இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 /15497/2022 / மையம்**

**தீர்மானம் எண்.313 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:34

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – மத்திய மண்டி– திடக்கழிவு மேலாண்மை பணியில் குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்பட்டு, தற்போது பயனற்ற நிலையில் உள்ள இலகுரக வாகனங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்புற பாடி மேற்கூண்டு 125 எண்கள், மற்றும் 8 க.மீ கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகள் 30 எண்கள் மற்றும் 1.1 க.மீ கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகள் 330 எண்களை 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் ஒப்பந்தபுள்ளிகளுடன் கூடிய பொது ஏலத்தில் விட்டு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய வேண்டி, உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | இலகுரக வாகனங்க்ளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்புற பாடி மேற்கூண்டு 125Nos | | 8க.மீ குப்பைத் தொட்டிகள் 30 Nos | | 1.1 க.மீ குப்பைத் தொட்டிகள் 330 Nos | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஒன்றின் விலை புள்ளி தொகை (GST நீங்கலாக) ரூ. | 125 **Nos** மொத்த மதிப்பு தொகை (GST நீங்கலாக) ரூ. | ஒன்றின் விலை புள்ளி தொகை (GST நீங்கலாக) ரூ. | 30 **Nos** மொத்த மதிப்பு தொகை (GST நீங்கலாக) ரூ. | ஒன்றின் விலை புள்ளி தொகை (GST நீங்கலாக) ரூ. | 330 **Nos** மொத்த மதிப்பு தொகை (GST நீங்கலாக) ரூ. |
| 1 | M/S.D.J டிரேடர்ஸ்,5 E , மதுரை ரோடு, பாலக்கரை, திருச்சி–8. | 1520,00 (80kgsx Rs,19.00) | **190000.00** | 16340.00 (860kgsx Rs 19.00) | **490200.00** | 1520.00x (80kgsx Rs 19.00) | **501600.00** |
| 2 | M/S .தென்றல் டிரேடர்ஸ், 57/1 புதுதெரு காஜாபேட்டை, திருச்சி.1 | 1440.00 (80kgsx Rs,18.00) | 180000.00 | 15480.00 (860kgsx Rs 18.00) | 464400.00 | 1440.00 (80kgsx Rs 18.00) | 475200.00 |
| 3 | M/S .இந்துஸ்தான் ஸ்கிராப் டிரேடர், தஞ்சாவூர் ரோடு, திருச்சி–8 | 1360.00 (80kgsx Rs,17.00) | 170000.00 | 14620.00 (860kgsx Rs 17.00) | 438600.00 | 1360.00 (80kgsx Rs 17.00) | 448800.00 |
| 4 | M/S .சேட் ஆட்டோ பார்ட்ஸ், 9 மதுரை ரோடு, பாலக்கரை, திருச்சி.8. | 1280.00 (80kgsx Rs,16.00) | 160000.00 | 13760.00 (860kgsx Rs 16.00) | 412800.00 | 1280.00 (80kgsx Rs 16.00) | 422400.00 |
| 5 | M/S .சகாயமாதா பேப்ரிகேட்டர்ஸ், 3/6–38 வாவுசி தெரு,மேலஅம்பிகாபுரம் திருச்சி–04 | 1200.00 (80kgsx Rs,15.00) | 150000.00 | 12900.00 (860kgsx Rs 15.00) | 387000.00 | 1200.00 (80kgsx Rs 15.00) | 396000.00 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள 5 நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் மெசர்ஸ்.D.J டிரேடர்ஸ், 5E, மதுரை ரோடு, பாலக்கரை, திருச்சி–8. நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி இலகுரக வாகனங்களில் இருந்து

அப்புறப்படுத்தப்பட்ட பின்புற பாடி மேற்கூண்டு 125 எண்களுக்கு ரூ.1,90,000/-ம் 8 க.மீ. கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகள் 30 எண்களுக்கு ரூ.4,90,200/-ம் மற்றும் 1.1 க.மீ. கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகள் 330 எண்களுக்கு ரூ.5,01,600/-ம் கொடுத்துள்ள விலைப்புள்ளி மற்ற நிறுவனங்களை காட்டிலும் அதிகமாக உள்ளது. இந்த அதிகமான விலைப்புள்ளி தொகையை அடிப்படையாக வைத்து 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் ஒப்பந்தபுள்ளியுடன் கூடிய பொது ஏலம் மூலம் விற்பனை செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

திடக்கழிவு மேலாண்மை பணியில் குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்பட்டு, தற்போது பயனற்ற நிலையில் உள்ள இலகுரக வாகனங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்புற பாடி மேற்கூண்டு **125Nos** எண்களை ரூ.**1,90,000/-, 330** எண்ணிக்கை **8** க.மீ. கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகளை ரூ.**4,90,200/-**, மற்றும் **30** எண்ணிக்கை **1.1** க.மீ. கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகளை ரூ.**5,01,600/-க்கும்** குறையாமல் ஒப்பந்தபுள்ளியுடன் கூடிய பொது ஏலம் மூலம் விற்பனை செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க அனுமதி **அளிக்கலாம்.**

இ**5/10094/2022**(மை)

**தீர்மானம் எண்.314 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:35

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022-23ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் III ன் தீர்மான எண்.64, நாள்.28.02.2023 ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 576 / 2022-23 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 31.03.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் III வார்டு எண் 38க்குட்பட்ட காட்டூர் திரு நகர் பகுதியில் தெருவிளக்கு இல்லாத மின்கம்பங்களில் 90 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 19 எண்கள் புதிதாக சப்ளை செய்து பொருத்தி இயக்கி தரும் பணி<br>மதிப்பீடு ரூ. 2.35 இலட்சம்<br>இ6/15824/2022 மையம் | 1. மெசர்ஸ். சபரி எலெட்ரிக்கல்ஸ், சென்னை<br>**0.04% குறைவு**<br>2. மெசர்ஸ். பாலாஜி எலெட்ரிக்கல்ஸ், திருச்சி<br>**0.01% அதிகம்** | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். சபரி எலெட்ரிக்கல்ஸ், சென்னை நிறுவனத்தார்** மதிப்பீட்டைக் காட்டிலும் **0.04** சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் III வார்டு எண் 39க்குட்பட்ட காட்டூர் பகுதியில் உள்ள Monfort School அருகில் 9மீட்டர் உயரமுள்ள மின்கம்பத்தில் 90 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 13 எண்கள் மற்றும் இதர மின் உபகரணங்களை புதிதாக சப்ளை செய்து பொருத்தி தரும் பணி<br>மதிப்பீடு ரூ.4.85 இலட்சம்<br>இ6/15825/2022 மையம் | 1. மெசர்ஸ். பாலாஜி எலெட்ரிக்கல்ஸ், திருச்சி<br>**0.13% குறைவு**<br>2. மெசர்ஸ். சபரி எலெட்ரிக்கல்ஸ், சென்னை<br>**0.74% அதிகம்** | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். பாலாஜி எலெட்ரிக்கல்ஸ், திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.13** சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு வார்டு குழு அலுவலகம் III ன் நிர்வாக அனுமதி எண். 64 நாள் 28.02.2023 ல் பெறப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 15824 / 2022 ( மையம்)**

**தீர்மானம் எண்.315 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:36

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022-23ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் III ன் தீர்மான எண்.66, நாள்.28.02.2023ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து,ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 575 / 2022-23 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 31.03.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தக்காரரின் பெயர் | ஒப்பந்த சதவீதம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் III வார்டு எண் 43க்குட்பட்ட பர்மா காலனி, காவேரி நகர், குறிஞ்சி நகர், அந்தோணியார் கோவில், ஆகிய பகுதியில் தெருவிளக்கு இல்லாத மின்கம்பங்களில் 90 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 20 எண்கள் புதிதாக சப்ளை செய்து பொருத்தி இயக்கி தரும் பணி<br>மதிப்பீடு ரூ. 2.50 இலட்சம்<br>இ6/1207/2023 மையம் | 1, M/s. சபரி எலெட்ரிக்கல் ஸ், சென்னை<br><br>2, M/s. பாலாஜி எலெட்ரிக்கல் ஸ், திருச்சி | 0.04% குறைவு<br><br>0.01% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s. சபரி எலெட்ரிக்கல்ஸ், சென்னை நிறுவனத்தார் மதிப்பீட்டைக்** காட்டிலும் 0.04 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் III வார்டு எண் 41க்குட்பட்ட திருவெறும்பூர் OFT Road. டி நகர், அம்பேத்கார் நகர், கக்கன் காலனி, சோழபுரம், தென்றல் நகர், ஆகிய பகுதிகளில் 40 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 10 எண்கள் மற்றும் 90 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 40 எண்கள் புதிதாக சப்ளை செய்து பொருத்தி இயக்கி தரும் பணி<br>மதிப்பீடு ரூ. 5.65 இலட்சம்<br>இ6/1208/2023 மையம் | 1, M/s. சபரி எலெட்ரிக்கல் ஸ், சென்னை<br><br>2, M/s. பாலாஜி எலெட்ரிக்கல் ஸ், திருச்சி | 0.04% குறைவு<br><br>0.01% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s. சபரி எலெட்ரிக்கல்ஸ், சென்னை நிறுவனத்தார் மதிப்பீட்டைக்** காட்டிலும் 0.04 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் III வார்டு எண் 36க்குட்பட்ட ஜெகநாதபுரம் ரேசன்கடை, திருமகள் தெரு, SIT கல்கண்டார்கோட்டை மெயின்ரோடு, எம்.ஜி.ஆர். நகர், (JOSEPH SCHOOL) இந்திரா தெரு, ஆகிய பகுதிகளில் 40 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 25 எண்கள் மற்றும் 90 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 37 எண்கள் புதிதாக சப்ளை செய்து பொருத்தி இயக்கி தரும் பணி<br>மதிப்பீடு ரூ. 6.35 இலட்சம்<br>இ6/1928/2023 மையம் | 1, M/s. சபரி எலெட்ரிக்கல்ஸ், சென்னை<br><br>2, M/s. பாலாஜி எலெட்ரிக்கல்ஸ், திருச்சி | 0.03% குறைவு<br><br>0.02% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s. சபரி எலெட்ரிக்கல்ஸ், சென்னை நிறுவனத்தார் மதிப்பீட்டைக்** காட்டிலும் 0.03 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. வார்டு குழு அலுவலகம் III தீர்மானம் எண் 66 நாள் 28.02.2023 இப்பணிகளக்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண்.5ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 1207 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்.316 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்:37**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2023–24 ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 07/2023–24ன் வாயிலாக 27.04.2023 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மைய அலுவலகத்தில் இயங்கி வரும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் இணைய இணைப்பிற்கான உள்ள மின் ஆளுமை உபகரணங்களை ஃபயரவால் , ரௌட்டர், ஆகிய கணினி உபகரணங்களை ஓராண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்<br>இ7/2920/2023 (மையம்)<br>**மதிப்பீடு ரூ.12.00 இலட்சம்** | 1. மெசர்ஸ்.ஆலன் இன்ஃபோ சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி<br>0.05% குறைவு<br><br>2, மெசர்ஸ். Zigma கேப்பிட்டல்ஸ், திருச்சி<br>1.50 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் . மெசர்ஸ்.ஆலன் இன்ஃபோ சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி<br>மதிப்பீட்டைக்காட்டிலும் 0.05 % குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 2 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோட்ட அலுவலகம் மற்றும் வரிவசூல் மையங்கள் மைய அலுவலகத்தில் இயங்கி வரும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் இணைய இணைப்பிற்கான உள்ள மின் ஆளுமை உபகரணங்களை ஃபயரவால் , ரௌட்டர், ஆகிய கணினி உபகரணங்களை ஓராண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் இ7/2921/2023 (மையம்) **மதிப்பீடு ரூ.11.00 இலட்சம்** | 1. மெசர்ஸ்.ஆலன் இன்ஃபோ சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி 0.05% குறைவு<br><br>2, மெசர்ஸ். Zigma கேப்பிட்டல்ஸ், திருச்சி 1.58 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் . மெசர்ஸ்.ஆலன் இன்ஃபோ சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி மதிப்பீட்டைக்காட்டிலும் 0.05 % குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு: –**

1. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்.1 மற்றும் 2ல் கண்டுள்ள் பணிகளுக்கு ஆணையர் அவர்களின் அனுமதி நாள். 03.04.2023ல் ஒப்புதல் அளித்துள்ளதை மாமன்றம் பார்வையிட்டு ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/ 2920 /2022(மையம்)**

**தீர்மானம் எண்.317 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்:38**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு – 5, வார்டு எண்.27க்குட்பட்ட பகுதியில், கல்வி நிதி 2022 – 23ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.376, நாள்.30.12.2022ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 3/2023–24ன் வாயிலாக 21.04.2023 அன்று மூன்றாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் 5, வார்டு எண்.27க்குட்பட்ட பென்சனர் தெரு மாநகராட்சி கோசா தொடக்கப் பள்ளியில் சுற்றுச்சுவருடன் கூடிய புதிய பள்ளிக் கட்டிடம் தரை தளம் கட்டும் பணி மேற்கொள்ளுதல் மதிப்பீடு. ரூ.59.60 இலட்சம் | 1. திரு.ஆர். ராமதாஸ், திருச்சி. 5.20% கூடுதல். பேச்சுவார்த்தைக்கு பின் மதிப்பீட்டை காட்டிலும் 0.05% குறைவு.<br><br>2. திரு. கே.ராமசாமி, திருச்சி. 8.00% கூடுதல். | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர். ராமதாஸ், ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 5.20 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருப்பினும், பேச்சுவார்த்தைக்குப் பின் தனது 29.04.2023ம் தேதிய விலைக் குறைப்பு கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 16059 / 2022 (மையம்)**

**தீர்மானம் எண்.318 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்:39**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் அனைத்துக் கோட்ட அலுவலகத்திலும் அலுவலக பயன்பாட்டிற்குத் தேவையான வண்ண கணினி வரிவசூல் இரசீதுகள் அச்சடித்துக் கொள்ளும் பணியினை பொதுநிதி 2023–24ன் கீழ் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.02/2023–24 ன் வாயிலாக 03.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும்ஒப்பந்தசதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | பொதுநிதி 2023–24 | | |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மைய அலுவலக ஆவண அறையில் இருந்து ஐந்து வார்டு குழு அலுவலகங்களுக்கு தேவையான வண்ண கணினிவரிவசூல் இரசீதுகள் அச்சிட்டு வழங்கும் பணி. **மதிப்பீட்டுத் தொகை ரூ.8.41இலட்சம்** | 1)மெசர்ஸ்.டீக்யூ பிரஸ்,திருச்சி 1.10%அதிகம். 2) மெசர்ஸ். திருச்சி இண்ட்கோ பிரஸ்,திருச்சி 0.06% குறைவு. | இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ். திருச்சி இண்ட்கோ பிரஸ்,திருச்சி மதிப்பீட்டை காட்டிலும் 0.06% குறைத்து விலைப்புள்ளி வழங்கியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணியின் மதிப்பீடு ரூ.8.41 இலட்சத்தில் மேற்கொள்ள ஆணையர் அவர்களது நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் பத்தி எண்.2ல் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. நிர்வாக நலன் கருதியும் இப்பணியின் அவசியம் கருதியும் மாண்புமிகு மேயர்அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு ஒப்புதல் வழங்கலாம்.

**சி9/2759/2023(மையம்)**

**தீர்மானம் எண்.319 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்:40**

இம்மாநகராட்சியில் மக்களுக்கு சிறந்த சேவை அளிக்கும் வகையில் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக பொது மக்கள் எளிதில் புகார் அளிக்கவும், சொத்துவரி மற்றும குடிநீர்வரி தொகையை மாநகராட்சியில் செலுத்தவும், மாநகராட்சியின் சேவைகளை பெறவும், QR Code அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் QR Code Sytem ஏற்படுத்துவதால் பொது மக்கள் தாங்கள் செல்போனில் QR Code Scan செய்து தங்களது புகார்களை பதிவு செய்யவும் மற்றும் வரி தொகையை செலுத்தவும் மற்றும் மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்படும் முக்கிய திட்டங்களும் அறிந்து கொள்ளலாம்.

இத்திட்டத்தை முதற்கட்டமாக வார்டுஎண் 22ல் அறிமுகப்படுத்த திட்டமிட்டு குடியிருப்போர் பற்றிய விவரங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களின் விவரங்கள் ஆகிய மாநகராட்சி தொடர்பாக புள்ளி விவரங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்திலிருந்து இம்மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள QR Code வடிவங்களுடன் ஒன்றிணைத்து QR Code Sticker பொருத்தும் பணியின் அவசர அவசியம் கருதி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1995ல் பிரிவு 15ன் கீழ் இப்பணியினை குறைந்த விலைப்புள்ளி அளித்த **M/s Selvaa Safety.** திருச்சி நிறுவனத்தின் மூலம் ரூ. 383340/– செலவீனத்தில் மேற்கொண்டதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு:** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**v¢1/3856/2023 (ika«)**

**தீர்மானம் எண்.320 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:41**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47 அண்ணா ஸ்டேடியத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று வருகைபுரிந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சர்.சி.வி.ராமன் பூங்கா மற்றும் கீழரண்சாலை கனரக சரக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய முடிக்கப்பட்டுள்ள திட்ட பணிகளை திறக்கப்பட்ட நிகழ்ச்சியில் விழா பந்தல் அமைக்கும் பகுதிகள், ஹாக்கி விளையாடுமிடம் எதிரில் வடக்கு பக்கம் உள்ள மேடைக்கு அருகில் சரளை மண் நிரப்பும் (Coarse Gravel) பணியினை மேற்கொள்ள ரூ.59.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.05% சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.தீக் அண்ட் கோ., திருச்சி நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ3/16693/2022 (மையம்)

**தீர்மானம் எண்.321 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:42**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் IVக்குட்பட்ட ஒத்தக்கடை உயர்மின்னழுத்த தலைமை (MPS – 1) கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள உயர்மின் அழுத்த மின் இணைப்பு எண் 53க்குரிய மின்மாற்றி Consumer வளாகத்தில் உள்ள ACB பேனலிருந்து MV பேனலுக்கு செல்லும் 3.5 X 400 Sqmm புதைமின் வடங்கள் (4 Run) பழுதடைந்துள்ளது. மேலும் Air Circuit Breaker க்கும் பழுதாகி உள்ளது. இதனால் மின்மோட்டார்களை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. அதுவரையில் தற்காலிகமாக இம்மின்மோட்டார்களை இயக்க 500 KVA திறன் கொண்ட ஜெனரேட்டர் வாடகை அடிப்படையில் பொருத்த வேண்டியுள்ளது. கழிவு நீர் உந்தும் பணியின் அவசர அவசியம் கருதி பழுதான 1000A, ACB, 3.5 X 400 sqmm புதைமின் வடங்களை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக புதிதாக 1600A, ACB -1 எண் 3.5X400 Sqmm புதைமின் வடங்களை (4 Run) சப்ளை செய்து பொருத்தி இயக்கவும் மேலும் மின்மோட்டார்களை இயக்க 500 KVA திறன் கொண்ட டீசல் ஜெனரேட்டரை வாடகை அடிப்படையில் அமைக்கவும் மற்றும் அதற்காகும் டீசல் செலவினம் உட்பட இப்பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ30.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.06%** குறைவான விலை வீகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. Power Electrical Works, Trichy ஒப்பந்ததாரர் மூலம், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் இப்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/4110/2023 (மையம்)**

**தீர்மானம் எண்.322 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:43**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு வார்டு எண்.38க்குட்பட்ட திருநகர் பகுதியில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு செல்லும் சாலையின் இருபுறமும் உள்ள சுவர்களில் கலைநயமிக்க விழிப்புணர்வு ஓவியம் வரையும் பணியினை (பகுதி 2) –மேற்கொள்ள ரூ.7.42 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ், மதிப்பீட்டின் விலையை விட 0.03% குறைவான விலைவிகிதத்தில் விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.K. ராமசாமி, திருச்சி, அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்ற பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ7/16699 /2022 (மையம்)**

**தீர்மானம் எண்.323 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:44**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண்.38க்குட்பட்ட திருநகர் பகுதியில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு செல்லும் சாலையின் இருபுறமும் மரக்கன்றுகள் மற்றும் பேவர் பிளாக் நடைபாதை அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.6.45 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ், மதிப்பீட்டின் விலையை விட 0.09% குறைவான விலைவிகிதத்தில் விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.K. ராமசாமி, திருச்சி, அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்ற பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/16700 /2022 (மையம்)

**தீர்மானம் எண்.324 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:45**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண்.38க்குட்பட்ட திருநகர் பகுதியில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு செல்லும் சாலையின் இருபுறமும் உள்ள சுவர்களில் கலைநயமிக்க விழிப்புணர்வு ஓவியம் வரைதல் – பகுதி 1 பணியினை மேற்கொள்ள ரூ.9.90 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ், மதிப்பீட்டின் விலையை விட 0.03% குறைவான விலைவிகிதத்தில் விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.K. ராமசாமி, திருச்சி, அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்ற பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/16701 /2022 (மையம்)

**தீர்மானம் எண்.325 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:46**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, தலைமை நீர்ப்பணி நிலையத்திற்குட்பட்ட பகுதியில் பொது நிதி 2022–23ன் கீழ், கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு, மாண்புமிகு மேயர் அவர்களது தீர்மான எண்.6, நாள்.15.02.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.587 / 2022–23 ன் வாயிலாக 06.04.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசிலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | அய்யாளம்மன் படித்துறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள காற்றுலர்த்தியுடன் கூடிய நீர்ப்பணி நிலைய வளாகத்தினை சுற்றி சுற்றுச்சுவர் கட்டுதல், மற்றும் மண் நிரவல் நிரப்பும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.44.00 இலட்சம்** | 1. மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி 0.05% குறைவு<br><br>2. திரு.ஜி.ஜி.சக்திவேல் திருச்சி 1.39% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. மாண்புமிகு மேயர் அவர்களது தீர்மான எண்.6, நாள்.15.02.2023ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 811/2023 / மையம்**

**தீர்மானம் எண்.343அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 64

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2022-23 ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 578/2022-23ன் வாயிலாக 06.04.2023 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.40க்குட்பட்ட இந்திரா நகர், மகா லெட்சுமி நகர்,அப்பே டவுன், மீனாட்சி நகர் ஆகிய பகுதிகளில் சிறுபாலம் கட்டும் பணி<br>மதிப்பீடு ரூ.8.65 இலட்சம்.<br>இ7/686/2023 (மையம்) | 1. திரு. A. மணிகண்டன் திருச்சி<br>0.01% குறைவு<br><br>2.திரு. S. கிருபாகரன் திருச்சி<br>0.22 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. A.மணிகண்டன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டடைக்காட்டிலும் 0.01 % குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.45க்குட்பட்ட பள்ளிவாசல் தெருவில் மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி<br>மதிப்பீடு ரூ..7.80 இலட்சம்<br>இ7/1391/2023 (மையம்) | 1. திரு. C. பட்டாபிராமன்<br>0.02% குறைவு<br><br>2.திரு. R. விஸ்வநாதன்<br>7.75 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு. C. பட்டாபிராமன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | வார்டு எண்.44க்குட்பட்ட முன்னாள் இராணுவத்தினர் காலனி பகுதியில் மழைநீர் வடிகால் திரும்ப கட்டும் பணி<br>மதிப்பீடு ரூ.4.90 இலட்ம்<br>இ7/1393/2023(மையம்) | 1. திரு. P. பிரபாகர்<br>0.89% குறைவு<br><br>2.திரு. K. ஜெயராமன்<br>0.06 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு. P. பிரபாகர் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.89% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 4 | வார்டு எண்.46க்குட்பட்ட பொன்மலைப்பட்டி காந்தி தெரு பூங்காவில் பழுது மற்றும் பராமரிப்பு பணி மதிப்பீடு ரூ..1.50 இலட்சம்<br>இ7/ 1392/2022 (மையம்) | 1. திருமதி. P. வெள்ளையம்மாள்<br>0.01% குறைவு<br><br>2.திருமதி. R. சந்திரா<br>1.49 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திருமதி. P. வெள்ளை யம்மாள் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு: -**

1. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண். 1 முதல் 4 வரை உள்ள பணிகளுக்கு, **மண்டலம் 3, வார்டு குழு தீர்மானம் எண். 65,68,67,69 நாள்.28.02.2023ல்** இப்பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்.1 முதல் 04 வரை உள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/ 686 /2023(மையம்)**

**தீர்மானம் எண்.344 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 65**

திருச்சிராப்பள்ளி மாநகாட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் அனைத்து பொதுமக்களுக்கு துரிதமான சேவையினை வழங்கும் பொருட்டு மின் ஆளுமை முறையில் இணையதளம் பேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்ட்டாகிராம் மற்றும் யூடியூப் வழியாக பெறப்படும் புகார்கள் மீது அந்தந்த துறைச்சாந்த அலுவலர்கள் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் இம்மாநகராட்சியில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நிகழ்வுகளுக்கு தேவையான விளம்பர செய்திகளை வடிவமைத்தல், இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்ட பணிகளுக்கு பணி தொடங்கிய முதல் பணி முடிவடையும் வரை அனைத்து பணிகளின் விபரத்தை புகைபடம் மற்றும் காணொலி காட்சி வடிவமைத்தல் ( Photo and Video Documentation) மற்றும் மத்திய /மாநில அரசு ஸ்வச் சர்வேக்ஸன், சீர்மிகு நகரத்திட்டம் , அம்ரூத் ஆகிய திட்ட பணிகளில் Urban Frame Work ல் மாநகராட்சிக்கான பிரத்யோக சமூக வலைதளம் ( Social Media) பற்றிய தகவல்களை தெரிவிப்பதற்கு மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு மாதம் ஒன்றுக்கு மதிப்பீடு ரூ.4.956 இலட்சம் (18 % சேவை வரி உட்பட) வீதம் மூன்று மாத காலத்திற்கு தொகை ரூ.14.88 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1. மாதம் ஒன்றுக்கு மதிப்பீடு ரூ.4.956 இலட்சம் (18 % சேவை வரி உட்பட ) வீதம் மூன்று மாத காலத்திற்கு தொகை ரூ.14.88 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2023-2024ஆம் வரவு செலவுத்திட்டத்தில் "கணினி இயக்க செலவினங்கள் (2201105" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.100.00 இலட்சத்திலிருந்து இப்பணியை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/ 5178 /2023 (மையம்)**

**தீர்மானம் எண்.345 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 66**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம் – IV, வார்டு எண்.61க்குட்பட்ட பகுதியில், பொது நிதி 2023-24ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு பணிக்குழுவின் தீர்மானம் எண்.34, நாள்.05.05.2023ல் அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 26/2023-24ன் வாயிலாக 12.05.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைகள் வழங்கியுள்ளது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண் 61, சர்வே எண்.114க்குட்பட்ட கொட்டப்பட்டு குளத்தில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய கலந்தாலோசரை நியமிக்கும் பணி.<br>மதிப்பீடு ரூ.9.95 இலட்சம். | 1. M/s. Glency Docmra Consultants India Pvt Ltd., சென்னை.<br>மதிப்பீட்டு விலை பேச்சுவார்த்தைக்கு பின் மதிப்பீட்டை காட்டிலும் 4.98% குறைவு.<br><br>2. M/s. Eclat Designs & Infrastructure Pvt Ltd, சென்னை.<br>37.20% கூடுதல். | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Glency Docmra Consultants India Pvt Ltd., நிறுவனம் மதிப்பீட்டு விலைக்கே ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருப்பினும், பேச்சுவார்த்தைக்குப் பின் தனது 15.05.2023ம் தேதிய விலைக் குறைப்பு கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 4.98 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

1) பணிக்குழுவின் தீர்மானம் எண். 34, நாள்.05.05.2023ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 15264 / 2022 (மையம்)**

**தீர்மானம் எண்.346 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள்:67

தமிழக அரசின் 2023–2024ம் ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத் தொடரில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களால் ரூ.600 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளியில் TIDEL Park அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதற்கிணங்க, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பஞ்சப்பூர் கிராமத்தில், திருச்சி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில், TIDEL Park கட்டுமானத்திற்காக, மாநகராட்சிக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலத்தினை TIDEL Park Limited–க்கு நில உரிமை மாற்றம் செய்து தருமாறு, மேலாண்மை இயக்குநர், TIDEL PARK LTD, சென்னை அவர்களின் கடித எண் SP–16013(11)/2022–SPL–TIDEL/TRICHY, நாள் 28.04.2023ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டது. உத்தேச இடம், வார்டு குழு அலுவலகம் 4, பஞ்சப்பூர் கிராமம், சர்வே வார்டு AP, பிளாக் எண் 1, நகரளவு எண் 1/9A பாகத்தில், 8.914 ஏக்கர் (388293.84 சதுரடிகள்) பரப்பளவில் அமைகிறது.

இந்நிலையில், அரசாணை எண் 35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.02.1997ல், மாநகராட்சிக்குச் சொந்தமான பட்டா நிலங்களை அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களுக்கு நில உரிமை மாற்றம் செய்யும் சமயங்களில், அது எந்த அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனத்திற்குத் தேவையானாலும், அந்நிலம் அப்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் தான் கொடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், TIDEL Park நிறுவனத்தினரின் கடிதத்தில், அரசாணை எண் 117, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை (Land Disposal Wing (LD4–1)), நாள் 18.03.2022 உத்தரவின்படி, அரசு நிலங்களுக்கு வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, அதன்படி நில மதிப்பு நிர்ணயம் செய்யக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, தகவல் தொழில்நுட்பத்துறையின் தேவை வளர்ந்து வரும் சூழலில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், படித்த மற்றும் வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் பொருட்டு, TIDEL Park நிறுவனம் அமைவது இன்றியமைதாதது என்பதால், மேற்படி TIDEL Park நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய ஏதுவாக, மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மேற்கூறிய 8.914 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தினை, TIDEL Park நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்கலாம்.

2. மேலும், மேற்படி TIDEL Park நிறுவனம் கோரும் நிலத்திற்கு உரிய நில மதிப்பு நிர்ணயம் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழியாக அரசுக்குக் கருத்துருக்கள் அனுப்பி வைக்க ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/4391/2023/மையம்)**

**தீர்மானம் எண்.347 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:68

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொது நிதி 2023-24ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள ஆணையர் அவர்களிடமிருந்து 11.04.2023ந் தேதி பெறப்பட்ட நிர்வாக அனுமதியினை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 13/2023-24ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 12.05.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **வேலையின் விபரம்** | **வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் மற்றும் ஒப்பந்ததாரர் விபரம்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | கொள்ளிடம் ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டுள்ள கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையங்களில் உள்ள 300 எம்.எம் விட்டமுள்ள நீள்சுற்று வட்டக் குழாய்களில் படிந்துள்ள மண் துகள்களை சுத்தம் செய்யும் பணி **மதிப்பீடு ரூ.13.95 இலட்சம்** | 1. மெசர்ஸ். விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் 0.05% குறைவு<br>2. திரு.ஜி.ஜி.சக்திவேல், திருச்சி 1.50% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணியினை மேற்கொள்ள ஆணையர் அவர்களது நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 1394/2023 / மையம்**

**தீர்மானம் எண்.348 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:69

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் –IIக்குட்பட்ட பகுதியில் பொது நிதி 2022-23ன்கீழ், கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு மண்டலம் 2 வார்டு குழு தீர்மானம் எண்.38 நாள்.23.03.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.24/2023-24ன் வாயிலாக 12.05.2023 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்<br>ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண்.47க்குட்பட்ட டி.வி.எஸ்.டோல்கேட் பாலத்தின் கீழ் மண் தரைகளில் பேவர்பிளாக் தளம் மற்றும் கிரில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ.9.50 லட்சம்** இ3/ 16704 /2022 (மையம்) | **ஆர்.விஸ்வநாதன், திருச்சி** 0.01% குறைவு<br>**ஆர்.ராஜ்குமார், திருச்சி** 2.26% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.ஆர்.விஸ்வநாதன்** , திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01 சதவீதம் குறைவான விலை வீதத்தில் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்து உள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:** **1.** மண்டலம் 2 வார்டு குழு தீர்மானம் எண்.38 நாள்.23.03.2023ல் இப்பணிக்கான மதிப்பீடுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2.மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/ 16704 /2023 (மையம்)**

**தீர்மானம் எண்.349 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:70

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம் – IV, வார்டு எண்.57க்குட்பட்ட பகுதியில், கல்வி நிதி 2022–23ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14150/2022/மா.ந.அ3, நாள்.11.04.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 22/2023–24ன் வாயிலாக 16.05.2023 அன்று முதன்முறைஉயாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைகள் வழங்கியுள்ளது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | எடமலைப்பட்டிபுதூர் ராஜிவ் காந்தி நகரில் புதிய மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு 16 வகுப்பறைகள், 1 ஆய்வகம், 2 ஆசிரியர் அறைகள் மற்றும் 1 நிர்வாக அலுவலகம் கட்டும் பணி **மதிப்பீடு ரூ.990.00 இலட்சம்.** | 1. மெசர்ஸ். ஸ்ரீ விநாயகா & கோ., திருச்சி. 5.00% கூடுதல் பேச்சுவார்த்தைக்கு பின் மதிப்பீட்டை காட்டிலும் 0.05% குறைவு.<br>2. மெசர்ஸ். ஆல்ஃபா மைன்ட்ஸ் வென்சர்ஸ், திருச்சி 8.00% கூடுதல். | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ். ஸ்ரீ விநாயகா & கோ., நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 5.00 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருப்பினும், பேச்சுவார்த்தைக்குப் பின் தனது 22.05.2023ம் தேதிய விலைக் குறைப்பு கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 16151 / 2022 (மையம்)**

**தீர்மானம் எண்.350 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:71

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I–ற்குட்பட்ட 23 சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களை மாமன்ற தீர்மானம் எண் 336, நாள் 30.12.2022 ன் படி **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிகல்ஸ்**, திருச்சி நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் இயக்கி பராமரித்து வருகிறது. இந்நிறுவனத்தின் மூன்றாம் ஆண்டு முதல் ஆறு மாத கால பராமரிப்பு காலம் 30.06.2023 உடன் முடிவடைய உள்ளது. தற்போது இந்நிறுவனம் நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருவதால், மேலும் ஆறு மாத காலத்திற்கு பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்யவும் அதற்குண்டாகும் செலவினத் தொகை விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கழிவுநீர் உந்து நிலையங்களின் வகை | கழிவுநீர் உந்து நிலையங்களின் விபரம் | தற்போது வழங்கப்பட்டு வரும் மூன்றாம் ஆண்டு முதல் ஆறு மாதத்திற்கு (01.01.2023 முதல் 30.06.2023 வரை) வழங்கப்பட்டு வரும் பராமரிப்பு தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் | மூன்றாமாண்டு அடுத்த ஆறு மாத காலத்திற்கு (01.07.2023 முதல் 31.12.2023 வரை) வழங்கப்பட வேண்டிய மொத்த செலவீனத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | சாலையோர கழிவுநீர் உந்து நிலையம் | 1.ராஜாஜி சாலை<br>2.ஸ்ரீரங்கம் வடக்கு வாசல்<br>3.மேலூர் ரோடு<br>4.அம்மா மண்டபம் ரோடு<br>5.T.V.கோவில் வடக்கு விபூதி பிரகாரம்,<br>6. வீரேஸ்வரம் அணுகு சாலை<br>7. கொள்ளிடம் ரிவர் பேங்க்<br>8. ட்ரங்க் ரோடு<br>9. ஸ்ரீநகர்<br>10. பேங்கர்ஸ் காலனி<br>11.அருள் முருகன் கார்டன்<br>12.ஆண்டவன் கல்லூரி<br>13.பர்மா காலனி<br>14.கந்தன் நகர்.<br>15.ஒத்த தெரு<br>16.மார்க்கெட் ரோடு<br>17.பெரியார் நகர்<br>18அடையவளஞ்சான் தெரு.<br>19.நெல்சன் ரோடு<br>20,கணபதி தோட்டம் மேலூர்<br>21.மேலூர்<br>22.நைட் சாயில் ரோடு<br>23.தாகூர் தெரு | 19,420 | 26,79,960/-<br>(23 X 06 X 19,420) |
| | | **மொத்தம்** | | **26,79,960/-** |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விபரப்படி மேற்படி நிறுவனத்திற்கு 01.07.2023 முதல் 31.12.2023 வரை மேலும் ஆறு மாத காலத்திற்கு (மூன்றாம் ஆண்டு) பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்குண்டாகும் மொத்த செலவினத் தொகை ரூ. **26,79,960/-** க்கு நிர்வாக அனுமதிகோரி மாமன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட அட்டவணை பத்தி எண் (5) ல் கண்டுள்ள விபரப்படி மூன்றாம் ஆண்டு மேலும் ஆறு மாத காலத்திற்கு ஆகும் செலவினத்தொகை ரூ. **26,79,960/-** க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி 23 எண்கள் சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களையும் **மெசர்ஸ்.பாலாஜி எலக்ட்ரிகல்ஸ்** திருச்சி நிறுவனம் மூன்றாம் ஆண்டு முதல் ஆறு மாத காலத்திற்கு நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருவதால் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் பக்கம் எண் 10 வரிசை எண் 7ல் தெரிவித்துள்ள படி இந்நிறுவனத்திற்கு மூன்றாமாண்டு மேலும் ஆறு மாத காலத்திற்கு (01.07.2023 முதல் 31.12.2023 வரை) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
3. இச்செலவினத்தை 2023–24 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கழிவுநீர் அகற்றல் – பணிகள் பராமரிப்பு செலவினங்கள் (2305010) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.600.00 இலட்சத்திலிருந்து இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ6/5838/2020 (மையம்)**

**தீர்மானம் எண்.351 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:72

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I –ற்குட்பட்ட 3 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள், மற்றும் 10 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்களை மாமன்ற தீர்மானம் எண்: 332, நாள் 30.12.2022 ன் படி **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிகல்ஸ்**, திருச்சி நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் இயக்கி பராமரித்து வருகிறது. இந்நிறுவனத்தின் மூன்றாம் ஆண்டு முதல் ஆறு மாத கால பராமரிப்பு காலம் 30.06.2023 உடன் முடிவடைய உள்ளது. தற்போது இந்நிறுவனம் நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருவதால், மேலும் ஆறு மாத காலத்திற்கு பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்யவும் அதற்குண்டாகும் செலவினத் தொகை விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கழிவுநீர் உந்து நிலையங்களின் வகை | கழிவுநீர் உந்து நிலையங்களின் விபரம் | தற்போது வழங்கப்பட்டு வரும் மூன்றாம் ஆண்டு முதல் ஆறு மாதத்திற்கு (01.01.2023 முதல் 30.06.2023 வரை) வழங்கப்பட்டு வரும் பராமரிப்பு தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் | மூன்றாமாண்டு அடுத்த ஆறு மாத காலத்திற்கு (01.07.2023 முதல் 31.12.2023 வரை) வழங்கப்பட வேண்டிய மொத்த செலவீனத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | உயர்மின்னழுத்த கழிவு நீர் உந்து நிலையம் | 1.வாசுதேவன் தெரு (SPS–3)<br>2.வெனீஸ் நகர் (பிளாக் – I)<br>3.மேல்சிந்தாமணி (NRAP) | 77985/- | 14,03,730/-<br>(3 X 06 X 77,985) |
| 2 | குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம் | 1.மேலூர் சாலை (SPS –1)<br>2.அம்மா மண்டபம் ரோடு (SPS –1A)<br>3. மேலூர் ரோடு (Old)<br>4.சக்தி மாரியம்மன் கோவில் தெரு (SPS–2)<br>5.கொண்டயம் பேட்டை (SPS3–B2)<br>6.அகிலாண்டேஸ்வரி நகர் (SPS–A)<br>7.லட்சுமி நாராயணன் நகர்<br>8.பெரியார் நகர்<br>9.ஸ்ரீராம் நகர்<br>10.திம்மராய சமுத்திரம் | 45133/- | 27,07,980/-<br>(10 X 06 X 45,133) |
| | | மொத்தம் | | 41,11,710/- |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விபரப்படி மேற்படி நிறுவனத்திற்கு 01.07.2023 முதல் 31.12.2023 வரை மேலும் ஆறு மாத காலத்திற்கு (மூன்றாம் ஆண்டு) பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்குண்டாகும் மொத்த செலவினத் தொகை ரூ.. **41,11,710/-** க்கு நிர்வாக அனுமதிகோரி மாமன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட அட்டவணை கலம் எண் (5) ல் கண்டுள்ள விபரப்படி மூன்றாம் ஆண்டு ஆறு மாத காலத்திற்கு ஆகும் செலவினத்தொகை ரூ. **41,11,710/-** க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

2. மேற்படி 3 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம், 10 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்களையும் **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிகல்ஸ்** திருச்சி நிறுவனம் மூன்றாமாண்டு முதல் ஆறு மாத காலத்திற்கு நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருவதால் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் பக்கம் எண் 10 வரிசை எண் 7ல் தெரிவித்துள்ள படி இந்நிறுவனத்திற்கு மூன்றாமாண்டு மேலும் ஆறு மாத காலத்திற்கு (01.07.2023 முதல் 31.12.2023 வரை) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
3. இச்செலவினத்தை 2022-23 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கழிவுநீர் அகற்றல் – பணிகள் பராமரிப்பு செலவினங்கள் (2305010) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.600.00 இலட்சத்திலிருந்து இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ6/5834/2020 (மையம்)**

**தீர்மானம் எண்.352 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:73

அரசு தனது ஆணை எண். 142, நிதி (படிகள்)த் துறை நாள்.17.05.2023ல் அரசு மற்றும் உள்ளாட்சி துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 38% சதவீதம் அகவிலைப் படியினை 4% சதவீதம் கூடுதலாக உயர்வு செய்து 42% சதவீதமாக 01.04.2023 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி அகவிலைப் படியினை 01.04.2023 ஏப்ரல் மாத ஊதியத்தில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் அகவிலைப் படி வழங்கிடவும் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

அரசு தனது ஆணை எண்.145 நிதி(ஓய்வூதிய)த் துறை நாள்.17.05.2023ல் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 38% சதவீதம் அகவிலைப் படியினை 4% சதவீதம் கூடுதலாக உயர்வு செய்து 42% சதவீதமாக 01.04.2023 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன் படி 01.04.2023 முதல் மாத ஊதியத்தில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் அகவிலைப் படி வழங்கிடவும் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட அரசாணைகளின்படி ஏப்ரல் 2023 மாதத்திற்கு உயர்த்தப்பட்ட அகவிலைப் படி வித்தியாச நிலுவைத் தொகை மற்றும் மே மாதம் முதல் ஊதியத்தில் மற்றும் ஓய்வூதியத்தில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் அகவிலைப்படி வழங்கிடவும் மேற்படி அரசாணையினை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண். சி2/5114/2023 (மையம்)

**தீர்மானம் எண்.353 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

தமிழ்நாடு அரசு
2023

கையெழுத்துத் தொடர்

நிதி (படிகள்)த் துறை

அரசாணை (நிலை) எண்.142, நாள்: 17-05-2023.

*(சோபகிருது, வைகாசி - 03, திருவள்ளுவர் ஆண்டு 2054)*

**சுருக்கம்**

**படிகள்** - அகவிலைப்படி - **01-04-2023** முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி விதம் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:-**

அரசாணை (நிலை) எண்.7, நிதி (படிகள்)த் துறை, நாள். 06-01-2023.

-oOo-

**ஆணை:**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட விதத்தில் அகவிலைப்படி அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது:-

| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி விதம்** [மாதம்ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01-01-2023 | அடிப்படை ஊதியத்தில் 38 சதவிதம் |

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில அரசுப் பணியாளர்களுக்கு 38 சதவிதத்திலிருந்து 42 சதவிதமாக அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்தில் உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், அகவிலைப்படியினை 4 சதவிதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, திருத்தி அமைக்கப்பட்ட விதத்தில் அகவிலைப்படி அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி விதம்** [மாதம்ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01-04-2023 | அடிப்படை ஊதியத்தில் 42 சதவிதம் |

3. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட கூடுதல் அகவிலைப்படி **01-04-2023** முதல் ரொக்கமாக வழங்கப்படும். 01-01-2023 முதல் 31-03-2023 வரை அகவிலைப்படியானது தொடர்ந்து 38 சதவிதமாகவே இருக்கும்.

4. ஏப்ரல் 2023 முதல் அகவிலைப்படி தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

த.பி.பா.

2

5. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழு நேர பணியாளர்களுக்கும், சில்லரைச் செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேர பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

6. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள விதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் (Pay drawn in the prescribed Levels in the Pay Matrix on Special times of Scale) ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சிச் செயலாளர்கள் / எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும்.

7. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303.அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

8. இதற்கான பட்டியல்கள் அனுப்பப்படும் போது, முதன்மை மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), அனுமதிக்காகக் காத்திராமல், திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்

அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அனைத்துத் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதன்மைச் செயலாளர்/ செயலாளர், சென்னை- 9.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை-22.
ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், ராஜ்பவன், சென்னை-22.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை-22.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித் துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
மாநில தகவல் ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை-18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் /அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை I), சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை II), சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை-9 / மதுரை.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை-35.

3

அனைத்து சம்பளக் கணக்குகள் அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து சார் கருவூல அலுவலர்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
ஆணையாளர், ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்பாயம், சென்னை-108.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை-104.
அனைத்து அரசுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-2.
அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர் / தூத்துக்குடி / வேலூர் / தஞ்சாவூர் / கும்பகோணம் / திண்டுக்கல் / நாகர்கோயில் / ஓசூர் / ஆவடி / காஞ்சிபுரம் / கரூர் / கடலூர் / சிவகாசி / தாம்பரம்.
ஊரக வளர்ச்சித் துறை, அனைத்து உதவி இயக்குநர்கள் / அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள் / அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
இயக்குநர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள், தரமணி, சென்னை-113.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

**நகல் பெறுநர்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர் – I, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் -(II,III&IV) சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர் -II சென்னை-9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனி செயலர், நிதித்துறை, சென்னை-9.
மத்திய அரசுச் செயலாளர், உள்துறை அமைச்சகம், புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், வெளிவிவகார அமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், சம்பள ஆராய்ச்சிப் பிரிவு,
நிதி அமைச்சகம் (செலவுத் துறை), அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்.

**-/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-**

17/05/2023

**பிரிவு அலுவலர்**

17/05/23

©
தமிழ்நாடு அரசு
2023

கையெழுத்துத் தொடர்

## நிதி (ஓய்வூதியம்)த் துறை

**அரசாணை எண்.145, நாள்: 17.05.2023**

*(சோபகிருது, வைகாசி-03, திருவள்ளுவர் ஆண்டு 2054)*

**சுருக்கம்**

ஓய்வூதியம் - ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி 01-04-2023 ஆம் நாள் முதற்கொண்டு உயர்த்தப்பட்ட வீதத்தில் அனுமதித்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.10, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 06-01-2023.
2. அரசாணை (நிலை) எண்.142, நிதி (படிகள்) துறை, நாள்: 17-05-2023.

-oOo-

**ஆணை**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கீழ்கண்டவாறு அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன: -

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் [மாதம் ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01.01.2023 | அடிப்படை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் 38 சதவீதம் |

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மாநில அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அகவிலைப்படியினை 01-04-2023 முதல் 38 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாநில அரசு பணியாளர்களுக்கான ஆணையினை பின்பற்றி, மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி அகவிலைப்படியினை உயர்த்தி அனுமதித்து அரசு ஆணையிடுகிறது:-

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் [மாதம் ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01-04-2023 | அடிப்படை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் 42 சதவீதம் |

*த.பி.பா.*

: 2 :

4. ஏப்ரல் 2023 மாதத்திற்கான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை உடனடியாக பெற்று தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தின் [IFHRMS] மூலம் வழங்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

5. ஒவ்வொரு தனி நபருக்கும் கொடுக்கப்பட வேண்டிய அகவிலைப்படியைக் கணக்கிடுவது ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்களின் பொறுப்பாகும்.

6. மாநிலக் கணக்காய்வுத் தலைவரிடமிருந்து முறைப்படியான அனுமதி பெறும் வரை காத்திராமல் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–35 மற்றும் கருவூல அலுவலர்கள் உடனடியாக திருத்திய அகவிலைப்படியை வழங்கலாம்.

7. இந்த ஆணை கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தும்.

(i) அரசு ஓய்வூதியதாரர்கள், அரசு உதவி பெறும் மற்றும் உள்ளாட்சி மன்ற கல்வி நிறுவனங்களின் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஏனைய ஓய்வூதியதாரர்கள்.

(ii) பொதுத்துறை நிறுவனம் / தன்னாட்சி நிறுவனம் / உள்ளாட்சி அமைப்பு/ கூட்டுறவு நிறுவனம் முதலியவற்றில் ஒட்டுமொத்த தொகை பெற்ற ஓய்வூதியத்தை தொகுத்து பெறும் தொகையில் தொகையைத் திரும்பப் பெறும் தகுதியுள்ள / திருத்தியமைக்கப்பட்ட வீதத்தில் திரும்பப்பெறும் தொகை பெற தகுதியுள்ள மாநில அரசுப் பணியாளர்கள்.

(iii) தற்போதைய மற்றும் எதிர்கால குடும்ப ஓய்வூதியர்கள்; பகிர்வு முறையில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில் அகவிலைப்படி விகிதாச்சாரத்திற்கிணங்க பிரிக்கப்படலாம்.

(iv) 01–11–1956ஆம் நாளன்று, தமிழ்நாடு மாநிலத்திற்கு மாற்றப்பட்ட பகுதிகளில் அதாவது கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள கருவூலங்களில் அதே நாளில் ஓய்வூதியம் பெறுகின்ற முந்தைய திருவாங்கூர்–கொச்சி மாநில ஓய்வூதியதாரர்கள்.

(v) தமிழ்நாடு சிறப்பு ஓய்வூதிய விதிகளின்கீழ் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் கருணைப்படி பெறும் ஓய்வூதியதாரர்கள்.

8. ஓய்வூதியதாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கத்தக்க அகவிலைப்படி குறித்த செலவினங்கள் முறையே கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் – 01. சிவில் – 101. வயது முதிர்வு – பணி ஓய்வுக்காலப் படிகள் மாநிலச் செலவினங்கள் – AC. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி – 303. அகவிலைப்படி – 01 அகவிலைப்படி.
(IFHRMS: த.தொ.கு. 2071 01 101 AC 30301)"

: 3 :

"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் – 01 சிவில் – 105 குடும்ப ஓய்வூதியங்கள் – மாநிலச் செலவினங்கள் –AC. தமிழ்நாடு அரசு குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி– 303 அகவிலைப்படி – 01 அகவிலைப்படி.

(IFHRMS: த.தொ.கு 2071 01 105 AC 30301)"

9. கருணைத் தொகை பெறும் மாநில அரசு மற்றும் முன்னாள் மாவட்ட வாரியத்தின் வருங்கால வைப்புநிதிக்குத் தொகை செலுத்திய / ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த பயனாளிகளான இறந்துவிட்ட பணியாளர்களின் மனைவியர் மற்றும் குழந்தைகளுக்கு அகவிலைப்படி அளிப்பது குறித்த ஆணைகள் தனியாக வெளியிடப்படும்.

10. இந்த ஆணையில் அகவிலைப்படி அனுமதித்ததன் காரணமாக அதிகரித்துவிட்ட செலவினம், 1956-ம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க, அடுத்து வரும் மாநிலங்களுக்கிடையே பிரித்துக்கொள்ளத் தக்கதாகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.உதயச்சந்திரன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அனைத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை– 600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை– 600 022.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.19, அரசு பண்ணை இல்லம், பெர்ன்பெட், நந்தனம், சென்னை– 600 035.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை– 18. (பெயரில்)
மாநில கணக்குத்துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை– 18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை– 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை– 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை– 600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை– 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை– 600 003.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை– 600 035.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

<u>நகல் பெறுநர்:</u>

நிதி (அ.ந.மு.I/அ.ந.மு.II/அ.ந.மு.III/பல்வகை/பட்டியல்/ஓ.கு.தீ/ஊ.கு./வரவு செலவு– பொது II/வரவு செலவு (BGC – GBM)/பொது)த் துறை, சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலாளர் –1), சென்னை–600009.
மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலாளர்கள் (II, III, மற்றும் IV), சென்னை–600 009.
மாண்புமிகு முதலமைச்சரின் துணைச் செயலாளர்–II, சென்னை–600 009.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைச்சரின் இளநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600009.

:4:

அரசு தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலாளர், சென்னை – 600 009.

அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், நிதித்துறை, சென்னை – 600 009

அரசு கூடுதல் செயலாளர் / ஓய்வூதிய இயக்குநர், சென்னை-600 035.

ஆணையர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை-600 035.

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை-600 035.

அனைத்து நகராட்சி ஆணையர்கள்.

அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.

இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை-600 001.

இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை, மத்திய அலுவலகம், மும்பை மத்திய இரயில் நிலையம் எதிரில், பைகுல்லா, மும்பை-400 008 (75 நகல்கள்).

பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள்/மண்டல அலுவலகங்கள்-ஓய்வூதிய இயக்குநர், சென்னை-600 035. மூலமாக

அனைத்து பொதுத் துறை வங்கிகள் – ஓய்வூதிய இயக்குநர், சென்னை-35. (மூலமாக).

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை-600 006.

தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், மேடவாக்கம் டேங்க்சாலை, கீழ்பாக்கம், சென்னை- 600 010.

தலைவர், தமிழ் நாடு ஓய்வூதியர் சங்கம், பதிவு எண்-84/2010 எண்.7, நீலி வீராசாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை- 600 015.

தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் – 609 001.

தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.

தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண்.35, திரு.வி.க.நெடுஞ்சாலை, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை- 600 014.

தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர், சென்னை-600 040.

தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் சங்கம், எண்.38-பி, பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.

தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், நாராயணராவ் மாளிகை, முத்து காளத்தி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தலைவர், அரசு டான்சி ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கம், ப்ளாட் எண்.65, தாமரை சாலை, அய்யப்பா நகர், பம்பல், சென்னை- 600 075.

தலைவர், ஓய்வுபெற்ற வேளாண்மை பட்டதாரி சங்கம், கே-பிளாக், எண்.2, சாலை ரோடு, ஹவுசிங் யூனிட், திருச்சி – 621 003.

தலைவர், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை, எண்.11, நாச்சிமுத்து லேஅவுட், கே.கே.புதூர், கோயம்புத்தூர் – 641 038.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அனைத்து ஓய்வூதியர்கள் சங்கம், மாநில மையம், எண்.50-A, காந்திஜி தெரு, தொரப்பாடி, வேலூர் – 632 002.

தலைவர், தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியதாரர்கள் சங்கம், வரதப்பன் தெரு, கோட்டை, சேலம் – 636 001.

தலைவர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக ஓய்வூதியர்கள் சங்கம், டி.என்.ஏ.யு வளாகம், கோயம்புத்தூர் – 641 003.

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம், எண்.3(ஜி1), கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம், எண்.3/454, வீரமா முனிவர் தெரு, முகப்பேர் கிழக்கு, சென்னை-600 037.

தலைவர், ஊரக வளர்ச்சித்துறை ஓய்வூதியர்கள் சங்கம், எண்.3/145, தெற்குத் தெரு, கம்பரசம்பேட்டை அஞ்சல், திருச்சிராப்பள்ளி-620 101.

தலைவர், தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம், M.R.அப்பன் இல்லம், 3/1076-2, முத்துராமலிங்கம் நகர், விருதுநகர்.

மாநிலத் தலைவர், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம், மாநில மையம், எண்.22/32, F-3, வேதவல்லி அடுக்ககம், ஆரிமுத்து (ஆ) தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், பிளாட் எண். 1740, B2, இரண்டாவது தளம், 18-வது பிரதான சாலை, அண்ணா நகர் மேற்கு, சென்னை-600 040.

ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் கூட்டமைப்பு, எண்.63, TNHB குடியிருப்பு, ஆவடி, சென்னை – 600 054.

தலைவர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற பொதுப்பணித் துறை ஊழியர் சங்கம், பொதுப்பணித்துறை அலுவலக வளாகம், சேப்பாக்கம், சென்னை-600 005.

: 5 :

தமிழ்நாடு இந்த் அப்சார்பி பென்சனர் நலச் சங்கம், எண் 12, 9-வது தெரு டான்சி நகர், வேளச்சேரி, சென்னை -600 042.

தலைவர், கிராம உத்தியகஸ்தர்கள் முன்சீப் கர்ணம், ஓய்வூதியர்கள் சங்கம், 10- D, ராதாகிருஷ்ணன் காலனி, முதல் தளம், சாஸ்திரி ரோடு, தென்னூர், திருச்சி.

மாநிலத் தலைவர், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை, 1/49 நெடுங்கல் அஞ்சல், காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 112.

செயலர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற நீதிபதிகள் நல சங்கம், D- 39 5வது முதல் குறுக்குத் தெரு, பாரத் ரத்னா ராஜீவ் காந்தி நகர், புதூர், அம்பத்தூர், சென்னை -600 053.

இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

-/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-

பிரிவு அலுவலர்

## பொருள்:74

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, நான்காவது மண்டலம், வார்டு எண்.54 ராயல் ரோடு பகுதியில் அமைந்துள்ள இந்திய இராணுவ பட்டாலியன் பிரிவில் 26.02.2023 அன்று ஆட்கள் தேர்வு நிகழ்ச்சி நடைபெற்றதற்கு தேவையான தண்ணீர் வசதி, நாற்காலி, ஒலி அமைப்புகள், கழிவறை மற்றும் இதரப்பணிகளை வாடகை அடிப்படையில் செய்து கொடுக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.3.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டு விலையை விட 0.09 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் விலைப்புள்ளி வழங்கிய M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சிராப்பள்ளி எனும் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை, மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.இ1/864/2023(மையம்)**

**தீர்மானம் எண்.354 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**மேயர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**